உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி-கூஎ] விக்கிரம ஹூ வைகாசி மீ [பகுதி-எ.

Vol. 37. May—June 1940. No. 7.

## பரதாழ்வான் வைபவம்.

[உஉசு-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

பரதாழ்வான் ராமபாதஸேவார்த்தியாய்க் கேகயத்தினின்றும் அயோத்திக்குச்செல்லநினைந்தநிலையில் அவனுக்கு உண்டான மகிழ்ச்சியைப் புலப்படுக்கும் மஹாகவி,

வாணிலாநகைதோன்றமயிர்புறம்
பூணவானுயர்காதலிற்பொங்கினன்
தாணிலாமலர்தூவினன்றம்முனைத்
தாணலாமெனுமாசைகடாவவே.

என்கிறார்.

இதனுள், வாணிலாநகைதோன்றலாகிய மந்தஹாஸமும், மயிர்புறம்பூணல் என்ற புளகாங்குரமும் அப்போது பரதாழ்வானுக்கு உண்டான மனமகிழ்ச்சிக்குறிப்பாயுள்ள மெய்ப்பாடாயின.

இம்மெய்ப்பாடு தோன்றுமாறு அவன் மனநிகழ்ச்சியான மகிழ்ச்சியை, காதல் என்று கொண்டு, அக்காதலை வானுயர்காதல் என்று சிறப்பித்து, அதற்குத் தூண்டுகோலாய்நின்று அதனை வெளிப்படுத்தியது அவனுக்கு ராமபாதஸேவையிலுள்ள ஆசைப்பாடென்கிறார்.

இதனால், பகவத்ஸேவைக்கு ஆசைப்பாடு வேண்டும்என்பதும், அது ஸாமாந்யதர்மாநுஷ்டானங்கள்போலே விதிக்குக் கட்டுப் பட்டுச் செய்வதாயில்லாமல், ஆசைப்பாட்டாலே (ராகப்ராப்த மாகச்) செய்யத்தக்கதென்பதும் ஆம்.

இக்கருத்துக்கொண்டே மஹாகவி,

"ஆசை பற்றி யறையலுற் றேன்மற்றிக்
காசில் கொற்றத் திராமன் கதை"

என்று தாமும் அநுஷ்டித்தபடிகாட்டினார்.

இங்கு ஆசையாலுண்டாகிய வேட்கையைக் காதல் என்றும், உயர்காதல் என்றும், வானுயர்காதல் என்றும் பகுத்து, ராமபாத ஸேவையில் பரதாழ்வானுக் குண்டாகிய காதலை வானுயர்காதல் என்கிறார்.

காதலாவது: ஒருவனுக்கு அவனுயிர்வாழ்க்கைக்கு வேண்டிய உடற்றொடர்புடைய பொன் நிலம் மாதர் முதலிய போகோப கரணங்களான புறப்பொருளில் விருப்புடைமையா லுண்டாகும் பற்றுள்ளம்.

உயர்காதலாவது: ஒருவனுக்கு அப்புறப்பொருளினும் சிறந்த அகப்பொருளாகிய தன் உயிரிலுள்ள அபிமானத்தாலுண்டாகும் பற்றுள்ளம்.

இதனை, ஒருவன் ஏனைப் புறப்பொருள்களை இழந்தாயினும் தானாகிய உயிரையும் உடலையும் ஓம்பமுயலுதலால் அறியலாம்.

இதற்கு, "ஏதி ஜீவந்தமாநந்தோ நரம் வர்ஷஶதாதபி"* என்னும் வடநூல்வழக்கும், உயிரோடிருந்தால் உப்புமாறியு முண்ண லாம் என்னும் உலகவழக்கும் சான்றாம்.

வானுயர்காதலாவது: ஒருவனுக்குத் தன் உயிரினும் சிறந்து உயிர்க்குயிராயுள்ள அந்தராத்மாவான பரம்பொருளிடத்திலுள்ள (பக்தியென்று சொல்லப்பட்ட) இன்றியமையாப்பற்றுள்ளம்.

---

* இதன்பொருள்:— 'உயிரிழக்கவேண்டியசமயத்திலும் இழவாது உயிரைப் பாதுகாத்திருக்குமொருவனைப் பலவருஷங்கள் சென்றாயினும் இன்பம்வந்தடையும்' என்பது.

இந்த வானுயர்காதலை மஹாகவி, விசுவாமித்திரமஹாமுனிவர் வாயாலே "காதலென்றன் உயிர்மேலும் இக்கரியோன்பாலுண்டு"* என்று சொல்லியிருப்பதும் இங்கு நோக்கத்தகும்.

காதலிற்பொங்கினன் என்றது அக்காதல் அகத்திலடங்காது உடற்புறம்போந்து கட்புலனுமாறு, புளகமுதலிய மெய்ப்பாடுண்டாக, உடல்பூரித்தான் என்பதாம்.

இது, இராமனைப்பிரிந்து இவன் சென்ற செலவை, முன்பு மஹாகவி, "ஓவலில் உயிர்பிரிந்து உடல் சென்ற" செலவாகச் சொல்லி, இவனுக்குள்ள வாட்டம் காட்டினார். இங்கு அதற்கெதிராக ஓவலில் உயிர்பெறும் உடல்கொண்ட மகிழ்ச்சி காட்டியவாறு.

காணலாமெனும் ஆசை கடாவவே என்றதன் கருத்து,—இங்குக் காட்சியின்மையால் மனத்தால் நினைத்து வழிபட்டுவந்தான் என்பதும் இனி, கண்ணுலும் கண்டு தொழுது பணிவிடைபுரியலாம்: என்னும் ஆக்கம்பற்றிய ஆசைப்பாடுடையனானான் என்பதுமாம்.

இதனால், கடவுளை மனத்தால் வழிபடுதலினும், மனம் மொழி மெய் என்னும் திரிகரணங்களாலும் வழிபாடுசெய்தலே சிறப்பாமென்பதாயிற்று.

இனி, தம்முனைக்கண்டு(பின்) தாணிலாமலர் தூவலாம் என்றது "தாணிலாமலர் தூவினன் றம்முனைக் காணலாம்" என்று முன்பின் மாறிக்கூறியதன் கருத்து: பகவத்ஸேவை செய்யுமவர், பகவத் ஸந்நிதியிற்சென்று முற்படத் திருவடிகள் முடியேறுமாறு பணிந்து வாயாரவாழ்த்தி மலர்கொண்டு அருச்சித்துத் திருவடிஸேவை செய்து, பின்பு திருமுடியளவான திருமேனி ஸேவைசெய்யவேண்டுமென்னும் இம்மெய்ந்நெறியொழுக்கத்தின் மரபுகாட்டுதலாம். இது, "அமலனாதிபிரான்" என்னும் அறிவனூன்முறையானும் அறியத்தகும்.

---

* இதன்பொருள், "ஏவலும் இறைஞ்சி" என்ற பாட்டினுள், "ஆவியங் கவனல தில்லையாதலின், ஓவலில் உயிர்பிரிந் துடல்சென் றென்னவே" என்ற பகுதியின் பொருள்விளக்குமிடத்து (இத்தொகுதியின் கஉ0—கஉக-ஆம் பக்கத்து) விரித்துரைக்கப்பட்டது.

இதனல், அவன்வழிபாட்டினும் அவன் திருவடிவழிபாடே சிறந்ததென்பதாயிற்று. இதற்கு, 'நின்னிற் சிறந்த நின்றாளிணை யவை' என்னும் பரிபாடலும் (ச-கூஉ) சான்றும்.

அன்றியும் மஹாகவி, முன்பு இவன் கேகயம்செல்லும்போது, "இராமன் சேவடிப்பூவினைச் சென்னியிற்புனைந்து போயினன்" என்று ராமபாதஸேவையில் இவனுக்கு மிக்க வேட்கை உண்டு என்பதற்கு விதையூன்றினர். அதனையே இங்கு, 'தாணிலாமலர் தூவினன் றம்முனைக் காணலாமெனும் ஆசை கடாவவே........ வானுயர்காதலிற் பொங்கினன்' என்று முளைப்பித்தார். இனி, "வந்தனை அவன்கழல் வைத்தபோதலால், சிந்தைவெங் கொடுந்துயர் தீர்கலாதென்றான்" என்று கிளைப்பித்து, பின்பு பாதுகாபட் டாபிஷேகத்தால் பயப்பிப்பாராகி இங்ஙனம் கூறினர் என்பதுமாம்.

இனி, பரதாழ்வான் ராம(பகவத்) ஸேவார்த்தியாய்ப் புறப் படும்பொழுது,

"பொழுதும் நாளும் குறித்திலன் போயினன்"

என்கிறார்.

இதனல், பகவத்ஸேவார்த்திகளாயுள்ளார் சுபயோக சுப முகூர்த்தங்கள்பார்த்துக்கொண்டு காலந்தாழ்க்கமாட்டார்: என்னும் ஒழுகலாறு காட்டப்பட்டது.

இதற்கு அடி என்னென்னில், ஒருவன் பகவத்ஸேவைசெய்ய நினைக்கும்பொழுதே அந்நினைவும் பகவத்ஸேவையாய், அந்நினை வாலே அக்காலம் பரமசோபனமாம்; ஆகவே அதற்குப் பிறிதொரு சோபனம் தேடவேண்டா என்பதும், தேடில் அந்த பகவத்ஸேவையி லுள்ள காதல் வானுயர்காதலாகாதென்பதும், இவனடைந்திருப் பது வானுயர்காதல் என்பதுமாம்: என்க.

இனி, பரதாழ்வான் கேகயத்தினின்றும், அயோத்திசென் றடையுமிடையே நாடும் நகரும் பொலிவழிந்திருத்தல்கண்டு என்ன தீங்கு விளைந்திருக்குமோவென்று கலங்கியவுள்ளத்தோடுசென்று தசரதனிருக்குமிடத்தில் அவனைக் காணது, கைகேசியாலே

அவன் இறந்தமைதெரிந்து மிகுந்த சந்தாபமடைந்தவனாகி, ஒருவாறு தன்னைத் தானே தேற்றிக்கொண்டானாலும், பிதிர்தேவ பாவனையால் அது மறித்தும்வந்து இவனுக்கு ஆறாத்துயர்விளைத்தலால் அத்துயர்தீரும்நெறியை அவன் அநுமானத்தாலும் ஆராய்ந்து தெளிந்துகொண்டதனை அறிவிக்கத்தொடங்கிய மஹாகவி,

எந்தையும் யாயுமெம் பிரானும் எம்முனும்
அந்தமில் பெருந்தனத் திராம னாதலால்
வந்தனை அவன்கழல் வைத்த போதலால்
சிந்தைவெங் கொடுந்துயர் தீர்த லாதென்றான்.

என்கிறார்.

இதன்பொருள்:—உலகத்தில் ஒருவனுக்கு உறவுமுறையாருள் யாரேனுமொருவர் இறந்துபட்டால், அதனாலுண்டாம் துன்பத்தை மற்றுள்ள உறவுமுறையோரெல்லோரும் ஒருங்குகூடி, ஆறுதலடையுமாறு சுபஸ்வீகாரம்செய்வித்து இனியமொழிகளால் ஆறுதலடைவிப்பதும், அவ்வுறவுமுறையோர் பலரையும் கண்டு அவன் ஆறுதலடைவதும் இயல்பு. அங்ஙனம் ஆறுதலடையுமாறு ஆறுதலடைவித்தற்குரிய எல்லாவுறவுமுறையும் எனக்கு இராம பிரானாதலால் அவனைச் சென்று, அடியிணைபணிந்தால் இத்துயரம் தீரும்; அல்லாதபோது தீராதென்றான்: என்பதாம்.

இவன், தனக்கு எந்தைமுதலான எல்லாவுறவுமுறையும் இராமபிரானென்றான் என்னும் இப்பொருள் உலகவழக்கில் ஔபசாரிகமாகும்.

இனி, இதன் உண்மைப்பொருள் அறிவனூற்கருத்தால் ஆராயத்தகும்.

இப்போது பரதாழ்வானுக்கு உள்ளது தந்தையிறந்தமையாலுண்டாகிய ஸாம்ஸாரிகதுக்கம்.

உலகத்தில் தந்தையாயுள்ளவன் இறந்தால் அவன்மைந்தர் துயருறுதற்குக் காரணமென்னை? பின்பு அது தீர்தற்குக் காரணமென்னை? என்று இங்கு ஆராயத்தகும்.

தந்தையாயுள்ளோன் நன்மக்களைப் பெறவேண்டித் தவம் புரிந்து பெற்றுக் கைம்மாறுகருதாத பேரன்புடையனாய் ஆதரித்து வளர்த்து, அறிவுபுகட்டி, ஐம்புலவின்பங்களும் ஆரத்துய்க்குமாறு வேண்டியனபுரிந்தும், தான் அரும்பாடுபட்டுத்தேடிய பெரும் பொருட்செல்வங்களையெல்லாம் அம்மைந்தருக்கே அளித்தும் அவன் செய்துபோந்த நன்றியை அந்நன்மக்களாயுள்ளார் நினையுங் கால், அந்நன்றியறிதல் என்னும் நல்லறமானது அந்நன்மக்களுள்ளத் துள்நிற்கும்; நிற்கவே, அத்தந்தை யிறவாமற்காத்தற்கேற்றதொரு கைம்மாறும்செய்யப்பெறு திழந்துவிட்டோமே என்னும் ஒரு கடுங் குறையுணர்வு அந்நன்மக்களுள்ளத்தே தோன்றும். அக்குறை யுணர்வு, உருவுடலில் கை கால் முதலிய உறுப்பறும் குறைபோல, அருவுடலாகிய மனத்தின்கண் அக்குறையுற்ற நன்மக்களைத் துன்புறுக்குமியல்புடையது. இத்துன்பம் தீரவேண்டுமானால் அக் குறைதீருமாறு இறந்த அத்தந்தையைத் தாம் உயிருடன்பெற வேண்டும். இறந்த தந்தையோ உயிர்த்தெழப்போவதில்லை; வேறு தீருமாறு என்னை? என்று ஆராயுமிடத்து, இவ்வாறு பிறந்துபடுந் துன்பத்துக்கு, இடமாயிருக்கும் தந்தைமுதலான சரீரசம்பந்த முடைய ஸாம்ஸாரிக பந்துஜனங்களைக்காட்டிலும், ஒருநாளும் இறந்துபடாமலே கைம்மாறுகருதாத கருணையாலே அத்தந்தை தாயரின் உள்ளுயிராய்நின்று அத்தந்தைதாயரின்வாயிலாக அம் மைந்தருக்கு அத்தந்தைதாயராற் செய்யமுடியாத கரசரணமுத லான கரணங்களுடன்கூடிய சரீரத்தைப் படைத்துக்கொடுத்து, அம்மைந்தரைப் பிறப்பித்துத் தோன்றுத்துணையாயிருந்து, எல்லா நன்மைகளையும் புரிந்துவரும் ஒரு பரமபிதா இருக்கக்கண்டு, அவனையடைந்தால் நூறிழந்ததுன்பம் கோடியெய்தத் திருமாறு போலத் தீரும் என்று தெளியத்தகும்.

இத்தெளிவுதோன்றுமாறு அநுமானப்பிரமாணத்தாலும் பரதாழ்வாரைாய்ந்தறிந்தமைகூறக்கருதிய மஹாகவி, அத்தெளிவு தோன்றற்குரிய அநுமானவாக்கியங்களும், அவ்வாக்கியங்களைப் பகுத்துக்காட்டற்குரிய யோகவிபாகமென்னும் நூற்புணர்ப்பும் அமையும்படி இப்பாட்டைப் பாடியுள்ளார்.

அநுமானமாவது, கண்டதொன்றுகொண்டு அதன் றொடர் புடைய காணுததொன்றுண்டென்று கருதுவது.

இங்கு இவன்கண்டது, ஆப்தவாக்கியமான சப்தப்பிரமாணத்தாலே தனக்கு இராமன், (ஆத்மசம்பந்தமுள்ள) எம்பிரானும், (சரீரசம்பந்தமுள்ள) எம்முனுமாயுள்ளான்: என்பது.

இதன்றொடர்புடைய காணுதது, (1) இராமன் (ஆத்மசம்பந்தமுள்ள) எம்பிரானேயன்றி, (சரீரசம்பந்தமுள்ள) எந்தையாயுமுள்ளோன் என்பதும், (2) அவ்வாறே ஆத்மசம்பந்தமுள்ள எம்பிரானேயன்றி, சரீரசம்பந்தமுள்ள யாயாயுமுள்ளான் என்பதுமாம்.

இவ்வுண்மைதுணிதற்கு, இப்பாட்டிலுள்ள அநுமானவாக்கியங்களின் அந்நுவயம் வருமாறு:—ஆதலால், என்பதனை "எம்பிரானும் எம்முனுமாதலால்" எனக் கூட்டி, (1) அந்தமில் பெருங்குணத்திராமன் (எனக்கு) எம்பிரானும் எம்முனுமாதலால் அவன், எனக்கு எம்பிரானும் எந்தையும் (ஆவன்) என்பதும், (2) அந்தமில் பெருங்குணத்திராமன் எனக்கு எம்பிரானும் எம்முனுமாதலால், அவன் எனக்கு எம்பிரானும் யாயுமாவன் என்பது மாம்.

இங்கு எந்தையும் யாயும் என்பன, அந்தமில்பெருங்குணத்திராமன் என்னும் எழுவாய்க்குப் பயனிலையாயின. (இது போகவிபாகத்தின் முற்பகுதிக்குரிய அந்வயம்)

இவற்றுள் முன்னது (1) இராமனைப் பரதன் தனக்கு எந்தை என்று துணிதற்குரியது; பின்னது (2) அவனை அவன் தனக்கு யாய் என்று துணிதற்குரியது. இத்துணிவுதோன்றுமாறு இவ்வனுமானங்களை முடிக்குமிடத்து,

அந்தமில்பெருங்குணத்திராமன் (என்பது பக்கம்)

(அவன் எனக்கு) எம்பிரானும் எந்தையுமாயுள்ளவன்
(என்பது துணிபொருள்)

(அவன் எனக்கு) எம்பிரானும் எம்முனுமாதலால் (என்பது ஏது)

எவனேவன் (எனக்கு) எம்பிரானும் எந்தையுமாயில்லையோ
அவனவன் (எனக்கு) எம்பிரானும் எம்முனுமாயில்லை.
(என்பது விபக்கத்தொடர்ச்சி.)

சுமந்திரன்முதலாயினோர்போல (என்பது வைதர்மிய திருஷ்டாந்தம்)

(இராமன்) அங்ஙனமல்லன். [சுமந்திரன் முதலாயினோர்போல எம்பிரானும் எம்முனுமாயில்லாதவனல்லன்.]
(என்பது வெதிரேக உபநயம்)

ஆதலின் இங்ஙனமல்லன். [எம்பிரானும் எந்தையுமாயில்லாதவனல்லன்] (என்பது வெதிரேக நிகமனம்)

இவ்வாற்றால் இராமன் பரதனுக்கு எம்பிரானும் எந்தையுமாயுள்ளவன் என்பது துணிவாயிற்று.

இவ்வாறே இவனுக்கு இராமன் யாய் ஆமாறும் துணியத்தகும்.

இவ்வனுமானங்களுக்கு, எம்பிரானும் எம்முனுமாதலால் என்னும் ஏதுவைக்கொண்டு, எவனெவன் எம்பிரானும் எம்முனுமாயுள்ளவனோ என்று அந்நுவயம்கூறுமிடத்து இவனுக்கு இராமனையன்றிப் பிறிதோரெம்பிரானும் எம்முனுமாயுள்ளோன் ஒருவனுமில்லாமையாலே அந்வயவெதிரேகியாகாது. 'எவனெவன் எம்பிரானும் எந்தையுமாயில்லையோ அவனவன் எம்பிரானும் எம்முனுமாயில்லை; சுமந்திரன்முதலானவர்போல' என்று சொல்லும்படி வெதிரேகவியாப்தியும் வைதர்மிய திருஷ்டாந்தமுமே யுண்மையால் இவை கேவலவெதிரேகியனுமானமாயின.

இது,

"தாயுந் தந்தையு மாயிவ் வுலகினில்
வாயு மீசன் மணிவண்ணன் எந்தையே"*

என்னும் அறிவனூற்கருத்தாதல் காண்க.

இங்ஙனம் எந்தையும் யாயும் எம்முனுமாயுள்ளோன் இராமன், எனச் சிறப்புமுறைபற்றிக்கூறிய உபலக்ஷணவிதியால் அவன் எல்லாவுறவுமுறையாயுமுள்ளோன் என்பதும் பெறப்பட்டது.

இனி இப்பாசுரமுழுமையுமான யோகவிபாகத்தின் பிறபகுதிப்பொருள் வருமாறு:—அந்தமில் பெருங்குணத்திராமன் எனக்கு எந்தையும், யாயும், எம்பிரானும், எம்முனும், மற்றெல்லா உறவு

* திருவாய்மொழி. 1. 10. 6.

முறையுமாயுள்ளவனுகலால் அவன்கழலில் வந்தனை வைத்தபோது சிந்தைவெங்கொடுந்துயர் தீருமேயல்லது, தந்தையொழிந்துள்ள எல்லாவுறவுமுறையாலும் தீர்க்கத்தகாத தந்தையிறந்த சிந்தை வெங்கொடுந்துயர் தீராதென்றான்: என்பதாம்.

சரீரசம்பந்தமாயுள்ள உறவுமுறை அநித்தியமாயுள்ளது; ஆத்மசம்பந்தமாயுள்ள உறவுமுறை நித்தியமாயுள்ளது என்பது தோன்ற **அந்தமில்** என்னும் அடைமொழி கொடுக்கப்பட்டது. அது, அந்தமில் எம்பிரானில் வேறல்லாத இராமனை அந்தமி லிராமன் என விசேடித்து, அவனில் வேறல்லாத எந்தைமுதலிய உறவுமுறைகளையும், அந்தமில் எந்தை அந்தமில் யாய் அந்தமில் எம்முன் என விசேடித்ததாகும். ஆகவே இறவாது நித்தியமா யுள்ள எந்தையான இராமபிரானுளன்; அவனைக் காணில் இறந்த எந்தையை இறவாதிருக்கக்கண்டாற்போன்று மனக்குறைதீர்த லால் சிந்தைவெங்கொடுந்துயர் தீருமென்றான்: என்பதாம்.

இக்கருத்து இவன்நெஞ்சில் நிலைபெற்றுநின்றுவிட்டதென் பதை, இவன் பின்பு இராமபிரானைக் காணும்போது "மறந்தனன் மலரடி வந்து வீழ்ந்தனன், இறந்தனன் றாதையை எதிர்கண் டெனனவே"* என்று மஹாகவி கூறுதலால் அறியலாம்.

அன்றியும், **அந்தமில்** என்பதனைக் குணங்களுக்கு அடை யாகக்கொண்டு அநந்தகல்யாணகுணங்களையுடைய இராமன் என்பதுமாம்.

இப்பொருளில், அவன் திருவடியில் முடிசாய்க்கும்போதே அவனுடைய கல்யாணகுணகௌனுபவங்கள் ஒன்றினொன் றுயர்ந்துதோன்றுமாகையால் அவ்வனுபவங்கள் இவனை ஆனந்தப் பிரவாகத்தில் அமிழ்த்தி இவனது சிந்தைவெங்கொடுந்துயர்த்தீயை ஆற்றுவிக்குமென்பது போதரும்.

இனி, வெங்கோடுந்துயர் என்றது இவ்வுலகவாழ்க்கையிலுள்ள தாபத்ரயம் என்னும் பிறவித்துன்பமுமாம். அது, 1 துயர் என்றும் 2 கொடுந்துயரென்றும் 3 வெங்கொடுந்துயர் என்றும் மூன்று பகுதிப்பட்டு ஒன்றினொன்று உயர்ந்திருக்கும் என்பதாம்.

* கிளைகண்டுநீங்குபடலம்—53.

இங்கு, துயர் என்றது தன்னைப்பற்றிவரும், ஆத்யாத்மிகமும், கோடுந்துயர் என்றது பூர்வகர்மபரிபாகமான ஊழ்வினையால் வரும் ஆதிதைவிகமும், வெங்கோடுந்துயர் என்றது கொடியோர், பகைவர், கள்வர் முதலிய பகுதிகளால்வரும் ஆதிபௌதிகமுமாம்.

வந்தனை அவன்கழல் வைத்தலாவது: தான் ஸ்வதந்த்ரன் என்னும் பொய்யுணர்வொழிந்து, பகவத்பாதந்த்ரன் என்னும் மெய்யுணர்வோடு அவனுக்கு அடியானாய்நின்று அவன் பணிவிடையே செய்வதாம்.

அதனால், இவன்செய்யுமவையெல்லாம் ராஜஸேவகர்செயல் போலே இறைவனுடைய செயலாக, இவனை அவ்வினைப்பயன் சாராமையாலும், இவனுக்குள்ள மெய்யறிவுடைமையால், பொய்யுணர்வடியாகவும் தீவினையடியாகவும் வரக்கடவனவாய துன்பங்கள் ஒன்றும் வாராமையாலும் 'வந்தனை அவன்கழல் வைத்தபோது சிந்தைவெங்கொடுந்துயர் தீரும்' என்றும், அல்லாதபோது தன் வயத்தன் என்னும் அஞ்ஞானமடியான தன்னலங்கருதிய இருவினைகளாலும் பிறவித்துன்பம் தோன்றுமாதலால் அது தீராதென்றும் கூறினன்: என்பதாம்.

'தனக்குவமை யில்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லான்—மனக் கவலை மாற்ற லரிது' என்பதும் இதுபற்றிவந்தது.

இதனால், பிறவித்துன்பம் தீர்தற்கு அவன் திருவடித்தொழும்பே உபாயம்; பிறிதோருபாயமில்லை: என்று நியமித்தவாறாயிற்று.

இது, "துயரறு சுடரடி தொழுதெழென் மனனே"* என்னும் அறிவனூற்பொருளாயிற்று.

திரு. நாராயணையங்கார்,
பத்திராசிரியர்.

---

* திருவாய்மொழி. 1. 1. 1.

ஸ்ரீ:

தா(யா)ராநகரவேந்தன் போஜதேவன் இயற்றிய

# ஸரஸ்வதீகண்டாபரணம்.

## (கலைமகள்கழுத்தணி)

---

[உ௯உ-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

### 16. காம்பீரியம்.

𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌸𑌵𑍍𑌯𑌪𑍇𑌕𑍍𑌷𑌤𑍍𑌵𑌂 𑌗𑌾𑌂𑌭𑍀𑌰𑍍𑌯𑌮𑌭𑌿𑌧𑍀𑌯𑌤𑍇 ।

*காப்பியப்பகுதியின் பொருளுணர்ச்சிக்குச் சாத்திரப்பொருளுணர்ச்சி யின்றியமையாததாயிருக்குமாறு புணர்ப்பின், அக்காப்பியப்பகுதியில் 'காம்பீரியம்' என்னும் குணம் தோன்றும்.*

**உதாரணம்:—**

𑌮𑍈𑌤𑍍𑌰𑍍𑌯𑌾𑌦𑌿𑌚𑌿𑌤𑍍𑌤𑌪𑌰𑌿𑌕𑌰𑍍𑌮𑌵𑌿𑌦𑍋 𑌵𑌿𑌧𑌾𑌯
𑌕𑍍𑌲𑍇𑌶𑌪𑍍𑌰𑌹𑌾𑌣𑌮𑌿𑌹 𑌲𑌬𑍍𑌧𑌸𑌬𑍀𑌜𑌯𑍋𑌗𑌾𑌃 ।
𑌖𑍍𑌯𑌾𑌤𑌿𑌂 𑌚 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌨𑍍𑌯𑌤𑌯𑌾𑌧𑌿𑌗𑌮𑍍𑌯
𑌵𑌾𑌞𑍍𑌛𑌨𑍍𑌤𑌿 𑌤𑌾𑌮𑌪𑌿 𑌸𑌮𑌾𑌧𑌿𑌭𑍃𑌤𑍋 𑌨𑌿𑌰𑍋𑌧𑌮𑍍 ॥

*மைத்திரிமுதலிய, மனத்தைத் தூய்மைசெய்பவற்றை யறிந்தவரும், கிலேசத்தையொழித்துப் பீஜத்துடன்கூடிய யோகத்தை யடைந்தவருமான ஸமாதிநிஷ்டர்கள், ஸத்வம் புருஷன்; இவற்றின் வேறான கியாதியை அடைந்து, பின் அதையும் தடுக்கவிழைகின்றனர்.*

*இங்கே கூறிய மைத்திரி, கிலேசம், பீஜம், யோகம், ஸமாதி, ஸத்வம், புருஷன், கியாதி: என்னும் சொற்பொருளுணர்ச்சிக்குச் சாங்கியநூல் முதலிய சாத்திரப்பொருளுணர்ச்சி யின்றியமையாது வேண்டப்படுதலின் இங்கே 'காம்பீரியம்' என்னும் குணமுளதாம்.*

[நல்லவற்றைச் செய்யுமாறு விதித்தும் தீயவற்றைச் செய்யற்கவென விலக்கியும்செல்வது சாத்திரமாம். மனத்தைத் தூய்மை செய்வன மைத்திரி முதலிய நான்காம். அவை:—மைத்திரி, கருணை, முதிதை, உபேக்ஷை என்பனவாம். மைத்திரி - எல்லோரிடமும் நட்புக்கொண்டொழுகல். கருணை - தயை. முதிதை - எப்பொழுதும் ஆநந்தத்துடனிருத்தல். உபேக்ஷை - தீயவற்றை விரும்பாமை. கிலேசம் - துன்பம். துன்பங்கள் ஐந்தாவன:—அவித்தியை, அஸ்மிதை, ராகம், துவேஷம், அபிநிவேசம் என்பன. அவித்தியை - அஞ்ஞாநம். அஸ்மிதை - திருத்தியின்றியிருத்தல். ராகம் - விருப்பு. துவேஷம் - வெறுப்பு. அபிநிவேசம் - பற்று. யோகமாவது சித்த விருத்தியைத்தகைதலாம்; அது வேறுகாரணங்களால் மாறுது நிற்குமாயின் ஸபீஜம் எனப்படும். ஸத்துவமாவது பிரதாநம்; புருஷன் - ஆத்மா; அவற்றின் பேதமே பிரதாக்கியாதி:' என்று சாங்கியநூல் கூறும்.]

## 17. விஸ்தரம்.

𑌵𑌿𑌸𑍍𑌤𑌰𑌃 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍...................

கூறும்பொருளை மிக விரித்துக்கூறின் 'விஸ்தரம்' என்னும் குணமாம்.

உதாரணம்:—

𑌸𑌂𑌗𑍍𑌰𑌾𑌮𑌾𑌙𑍍𑌗𑌣𑌮𑌾𑌗𑌤𑍇𑌨 𑌭𑌵𑌤𑌾 𑌚𑌾𑌪𑍇 𑌸𑌮𑌾𑌰𑍋𑌪𑌿𑌤𑍇
𑌦𑍇𑌵𑌾𑌕𑌰𑍍𑌣𑌯 𑌯𑍇𑌨 𑌯𑍇𑌨 𑌸𑌹𑌸𑌾 𑌯𑌦𑍍𑌯𑌤𑍍𑌸𑌮𑌾𑌸𑌾𑌦𑌿𑌤𑌮𑍍 ।
𑌕𑍋𑌦𑌣𑍍𑌡𑍇𑌨 𑌶𑌰𑌾𑌃 𑌶𑌰𑍈𑌰𑌰𑌿𑌶𑌿𑌰𑌸𑍍𑌤𑍇𑌨𑌾𑌪𑌿 𑌭𑍂𑌮𑌣𑍍𑌡𑌲𑌂
𑌤𑍇𑌨 𑌤𑍍𑌵𑌂 𑌭𑌵𑌤𑌾𑌪𑌿 𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌰𑌤𑍁𑌲𑌾 𑌕𑍀𑌰𑍍𑌤𑍍𑌯𑌾 𑌚 𑌸𑌪𑍍𑌤𑌾𑌬𑍍𑌧𑌯𑌃 ॥

அரசே! நீ போர்க்களங்குறுகி வில்லில் நாணைப்பூட்டினவுடன் எவ்வெப்பொருள்களால் எவ்வெவை அடையப்பட்டன? (கேட்பாயாக). உன் வில்லால் அம்புகளும், அம்புகளால் பகைவர்தலைகளும்,

அத் தலைகளால் பூதலமும், அப்பூமண்டலத்தால் நீயும், உன்னால் புகழும், புகழால் கடல்களேழும் அடையப்பட்டன.

இங்கே, அரசனைநோக்கி, 'நீ கடலேழும் வியாபித்த புகழை எய்தியுள்ளாய்' என்றுகூற எடுத்த பொருளை இங்ஙனம் பலபடியாக விரிவுடையதாகக்கூறியதால் 'விஸ்தரம்' என்னும் குணமுள தாயிற்று.

## 18. ஸம்க்ஷேபம்.

..............𑌸𑌂𑌕𑍍𑌷𑍇𑌪𑌵𑌸𑍍𑌤𑍁𑌨𑌃 𑌸𑌂𑌵𑍃𑌤𑌿𑌃 ॥ ௮௫ ॥

மிக விரிந்தபொருளைச் சுருக்கிக்கூறுதல் 'ஸம்க்ஷேபம்' எனப் படும்.

உதாரணம்:—

𑌶𑍍𑌰𑍋𑌤𑌵𑍍𑌯𑌂 𑌧𑌰𑍍𑌮𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌵𑌂 𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌵𑌾 𑌚𑍈𑌵𑌾𑌵𑌧𑌾𑌰𑍍𑌯𑌤𑌾𑌂 ।
𑌆𑌤𑍍𑌮𑌨𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿𑌕𑍂𑌲𑌾𑌨𑌿 𑌪𑌰𑍇𑌷𑌾𑌂 𑌨 𑌸𑌮𑌾𑌚𑌰𑍇𑌤𑍍 ॥

அறத்தின் முழுவுண்மையும் கேட்கப்படுக; கேட்டபின் மனத்திலும் மறவாது கொள்ளப்படுக; அறமாவது, ஒவ்வொருவனும் தனக்குத் தீங்குபயப்பனவாகத் தெரிந்த செயல்களைப் பிறருக்குச் செய்யாதொழிதலேயாம்.

நூல்களில் மிக விரித்துக்கூறும் அறத்தின் இயல்பை இச் சுலோகத்தின் பின்னிரண்டடிகளிற் சுருக்கிக்கூறிவிட்டமையால் இது 'ஸம்க்ஷேபம்' என்னும் குணமுடையதெனப்படும்.

## 19. ஸம்மிதத்துவம்.

𑌶𑌬𑍍𑌦𑌾𑌰𑍍𑌥𑍌 𑌯𑌤𑍍𑌰 𑌤𑍁𑌲𑍍𑌯𑍌 𑌸 𑌸𑌂𑌮𑌿𑌤𑌤𑍍𑌵𑌂 𑌤𑌦𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ।

சொல்லும் பொருளும் எங்கே சமமாயிருக்கின்றனவோ அங்கே 'ஸம்மிதத்வம்' என்னும் குணமாம்.

உதாரணம்:—

உத்பூதேऽபி ஶிவஸ்ய ஶௌக்ஷமஹிதா
வக்த்ரா நவாங்கஶ்ச ந
ப்ரயாவோ Zஹ்ருதயம் த்ருபம் தக்ஷவஶா
ஶாஷம்பஶாநம் ஶ்ரிய: ।

ஸம்வாத: ப்ரணவேந யஸ்ய க்ஷதா
காயேகதாயாம் தயோ
ப்ரஹ்மரந்த்ரவிசிந்திதேந ச ஹ்ருதி
த்யாதவ்யத்வேந ச ॥

உமாதேவி திருமேனியும் சிவபிரான் திருமேனியும் ஒன்றுபட்டிருத்தலால், (வட்டவடிவமான) பிரணவம், பிரமரந்திரத்தில் சிந்திக்கப்படுதலாலும் மனத்தில் தியானிக்கப்படுதலாலும் இருகூறுபட்டுகின்று விளங்குவதுபோலுள்ளவையும், ஒன்றையொன்று ஒத்துள்ளவையுமான சிவபிரான்மவுலியிலுள்ள வளர்ந்த பிறைமதியும் உமாதேவியாரின் கொங்கைகளிலுள்ள வளர்ந்த நகக்குறியும் ஆகிய அவ்விரண்டும் உங்களுக்கு மங்கலத்தையளிப்பனவாக.

இங்கே பிரணவத்தை, சமமாய் இரண்டாகப்பிரித்துவைத்தல் 'ஸம்மிதத்துவம்' எனப்படும்.

## 20. பாவிகத்துவம்.

ஸாபிப்ராயோக்திவிந்யாஸோ பாவிகத்வம் நிகத்யதே ॥ ॥

கருத்துடன்கூடிய கூற்றையமைத்தல் 'பாவிகத்துவம்' எனப்படும்.

உதாரணம்:—

த்ருஷ்டிம் ஹே ப்ரதிவேஶிநி க்ஷணமிஹாப்யஸ்மத்க்ருஹே தாஸ்யஸி
ப்ராயேணாஸ்ய ஶிஶோ: பிதா ந விரஸா: கௌபீரப: பாஸ்யதி।

𑌏𑌕𑌾𑌕𑌿𑌨𑍍𑌯𑌪𑌿 𑌯𑌾𑌮𑌿 𑌤𑌦𑍍𑌵𑌰𑌮𑌿𑌤𑌃 𑌸𑍍𑌰𑍋𑌤𑌸𑍍𑌤𑌮𑌾𑌲𑌾𑌕𑍁𑌲𑌂
𑌨𑍀𑌰𑌨𑍍𑌧𑍍𑌰𑌾𑌸𑍍𑌤𑌨𑍁𑌮𑌾𑌲𑌿𑌖𑌨𑍍𑌤𑍁 𑌜𑌰𑌠𑌚𑍍𑌛𑍇𑌦𑌾 𑌨𑌳𑌗𑍍𑌰𑌨𑍍𑌥𑌯𑌃 ॥

அடுத்தவீட்டில் வசிப்பவளே! ஒரு கணநேரம் உன்பார்வையை எங்கள்வீட்டிற் செலுத்துவாயாக. இந்த (என்) குழந்தையின் தகப்பன் சுவையற்ற கிணற்றுநீரைப் பருகுவதில்லை; பச்சிலைமரங்கள் அடர்ந்ததும் சிறந்ததுமான ஆற்றுக்கு(த் தண்ணீர் கொணர) நான் தனியளாகவேனும் போய்வருகிறேன். (என் செய்வது? செல்லும்போது) கடிய நாணன்முட்கள் என் உடலைக் (கீறும். கீறினும்) கீறுக.

ஆற்றின்கரையிற் பச்சிலைமரங்களடர்ந்ததோரிடத்தைச் சோரநாயகனுக்குக் குறியிடமாக அறிவித்த ஒருத்தி அவனுடன் கூடுதற்கு அங்குச் செல்கின்றவள், தான் தண்ணீர் கொணரப்போவதாகக் கூறி, அங்கே அவன்கூட்டத்தால் பின்பு உண்டாகும் நகக்குறிகளை நினைந்து, அதை மறைக்க, நாணன்முட்கள் என் மேனியில் வடுவுண்டாக்குமென்றும் கூறுதலால் இது கருத்துடைய கூற்றமைந்திருத்தலாகிய 'பாவிகத்துவம்' எனப்படும்.

## 21. கதி.

𑌗𑌤𑌿𑌃 𑌸𑌾 𑌸𑍍𑌯𑌾𑌦𑌵𑌗𑌮𑍋 𑌯𑍋𑌽𑌰𑍍𑌥𑌾𑌦𑌰𑍍𑌥𑌾𑌨𑍍𑌤𑌰𑌸𑍍𑌯 𑌤𑍁 ।

ஒருபொருளிலிருந்து வேறொரு குறிப்புப்பொருள் தோன்றின் அது 'கதி' என்னும் குணமாம்.

உதாரணம்:—

𑌶𑌾𑌖𑍇 𑌕𑍋𑌽𑌯𑌂 𑌵𑍃𑌕𑍍𑌷𑌃? 𑌗𑍃𑌹𑌵𑌾𑌟𑌿𑌵𑍃𑌕𑍍𑌷𑌃; 𑌕𑌿𑌂 𑌤𑌵 𑌪𑌿𑌤𑌾?
𑌨 [illegible] ।
𑌹𑌾𑌂𑌹𑌾𑌂𑌹𑌾𑌂 [illegible]
𑌕𑍍𑌵 𑌯𑌾𑌮𑌿 [illegible] ॥

ஏ கல்யாணி! இக் கிழவர் யார்? இவ்வீட்டுக்கு உரியோர். உன் தகப்பனா? இல்லை; என் கணவர், இரவில் கண் தெரியாதவர், மேலும் செவிடர். உம். உம். நான் களைப்படைந்திருக்கிறேன், இங்கே ஓர் அறையில் படுத்திருக்க விரும்புகிறேன். இரவில் வேறெங்கே செல்லப்போகிறாய்? முகட்டுப்பூச்சி முதலியவையில்லாத இங்கேயே உறங்குவாயாக.

இங்கே ஒருவன் (காதலுற்று) வினவிய வினப்பொருளினின்று அவன் கூட்டத்தில் விழைதலுடையானென்னும் குறிப்புப் பொருளை அறிந்து, அதற்கிசைதலுடையாளொருத்தி தன் கணவன் செவிடனும் குருடனுமாயிருக்குமாறு கூறி, அவனை இங்கே உறங்குக எனக் கூறியதனானும், அக்கூற்றின்பொருளால் இரவில் கூட்டம் நிகழத்தகும் என்று குறிப்புப்பொருள் பெறப்படுதலாலும் இது 'கதி' என்னும் குணமுடையதாம்.

[தொடரும்]

V. S. ராமஸ்வாமிசாஸ்திரி, B.A., B.L.,

மதுரை.

# கம்பராமாயணசாரம்.

[உருகூ-ஆம் பக்கத் தொடர்ச்சி]

[ சீதை வாய்விட்டாற்றியதைக் கேட்டதனாலும் சோர்வுற்றிருப்பதைப் பார்த்ததனாலும் அவள் நம்பிக்கையிழந்து அதைரியமடைந்திருக்கிறாளென்று இராவணன் மகிழ்ந்து இந்தப் பெருந்துயரத்தை இனித் தாங்காள், தந்தையைக் காப்பதற்காகத் தனக்கு இணங்கிவிடுவாளென்றெண்ணி, அவளைநோக்கி, (முன் அவள் முறைப்பாயிருந்தாள் என்று உயர்வுப்பன்மையாக விளித்தவன், இப்போது தளர்ந்துவிட்டாளென்று ஒருமையாக விளிப்பானாய்க்) கூறுகின்றான்.

'அணங்கே! உன்மேலுள்ள அளவுகடந்த காதலால், அறிவு மயங்கி, நினைக்கவேதகாத கொடுந்துன்பத்தைச் செய்யத்தொடங்கினேன். பொறுத்தருள்வாயாக. இன்னும் மிதிலையோரை அழிக்கவில்லை. உன் தந்தையைக் கொன்றால்தான், என் உயிர் பிழைக்க முடியுமென்றிருந்தாலும், அவனைக் கொல்லேன். பொறுக்கமுடியாத காமநோயைப் போக்குவாயானால், பூமியிலே பரதகண்டத்திலே விதேகநாட்டுக்குமட்டும் அரசனாயிருக்கிற உன் தந்தைக்கு என் ஆதிக்கத்துக்குட்பட்ட திரிலோகங்களையும் தேவலோகத்தோடுசேர்த்துக் கொடுப்பேன்; இலங்காநகரத்தையுங் கொடுத்துவிட்டு, வேறெங்காயினும் இருந்து வாழ்வேன்; சங்கநிதி பதுமநிதியிரண்டும் தருவேன்; புட்பகவிமானத்தையுமே கொடுப்பேன்; வேண்டுமானால், சங்கரன் தந்த சந்திரகாசவாளையுங்கூடத் தருவேன். உனது இனிய அழகிய பவளம்போன்ற திருவாயால் அருள்கூர்ந்து ஒருவார்த்தை அறைகுறையாகச்சொல்வாயானாலும், தேவேந்திரன் தலைமேலுள்ள கிரீடத்தை உனது தந்தைதலைமேற் சூட்டித் தேவர்களும் தேவமாதரும் பணிவிடைசெய்யும்படி பணித்து நானும் பணியாளனாவேன். நீ இலக்குமியல்லையெனில்,

அவளும் வந்து உனக்கு ஏவல்புரிய ஆணையிடுவேன். உன் தந்தைக்கு உன்னைப்பெற்றதன் பயனாகத் திரிலோகாதிபத்தியத்தைக் கொடுப்பாயாக' என்றான் இராவணன்.

(இவ்வாறு கற்பை நீக்கும்படி இராவணன் கூறியதனால், சீதை கொடுங்கோபங்கொண்டு அந்தக் கோபாவேசத்தினால் இழந்த தைரியமும் இராமசெய நம்பிக்கையும் திரும்பவந்து வீறுகொண்டு கதித்தோங்க, உக்கிரவீரபத்திரகாளியென்னும்படி, கோபமும் வீரமும் கூடி ஓர் உருக்கொண்டாற்போன்று) சீதை மறுமொழி கூறுகின்றாள்.— ]

### சீதை கொடுங்கோபங்கொண்டு கூறல்

109 இத்திருப் பெறுகிற் பானு[1] மிந்திர னிலங்கை நுங்கள்
பொய்த்திருப் பெறுகிற் பானும் விபீடணன் புலவர் கோமான்
கைத்திருச் சரங்க ளுன்றன் மார்பிடைக்[2] கலக்கற் பால
மைத்திரு நிறத்தான் றாளென் றலைமிசை வைக்கற் பால.

கொண்டுகூட்டு: இத்திருப் பெறுகிற்பான் இந்திரன். நுங்கள் இலங்கைப் பொய்த்திருப் பெறுகிற்பான் விபீடணன். புலவர்கோமான் கைத்திருச் சரங்கள் உன்மார்பிடைக் கலக்கற்பால. (அந்த) மைத்திருநிறத்தான் தாள் என் தலைமிசை வைக்கற்பால.

பொருள்: (நீ என் தந்தைக்குத் தருவதாகச்சொல்லிய) இந்த(த் தேவலோக ராச்சிய)ச் செல்வத்தைப் பெறப்போகிறவன் இந்திரன். (நீ என் தந்தைக்கு ஈய எண்ணிய) இலங்கையோடுகூடிய பொய்ச்செல்வத்தைப் பெறுபவன் விபீடணன். (உன் ஆகத்தைக் கலப்பது இராமபிரான் தேவியன்று; அந்தத்) தேவதேவனுடைய திருக்கையினின்று விடப்படுகின்ற பாணங்களே உன் ஆகத்திலே கலக்கற்பாலன. (என் விருப்பு, எனக்கு இலக்குமி ஏவல்செய்வதன்று; மற்று யாதெனில்,) அஞ்சனம்போலும் கார்வண்ணன் திருவடிகள் என்சென்னியிற் சூடற்பாலன. (ஆக, அவனுக்கு நான் ஏவல்செய்வதே.)

திரு - செல்வம். புல்வர் - தேவர். கோமான் - தலைவன். புலவர்கோமான், இங்கே, இராமனைக்குறித்தது. கைத்திருச்சரம் - கையிலுள்ள அழகிய பாணங்கள். மைத் திரு நிறத்தான் - அஞ்சனம்போலும் அழகிய நிறமுடையவன் - இராமன். தாள் - பாதம்.

உன்செல்வங்களை என் தந்தை அடையான். இந்திரனும் விபீடணனும் அடைவார். நீ, இன்பமடைய எண்ணுதற்கெதிராக, மரணமடைவாய். நான் இலக்குமியை அடிமைகொள்ளேன்; இராமனுக்கு அடிமையாயுள்ளேன்: என்பது கருத்து.

பாடபேதம்: [1] புணர்கிற்பானும். [2] மார்பினில், மார்பொடுங்.

110 சொல்லுவ மதுர மாற்றந் துண்டத்தா லுண்டுன்[1] கண்ணைக்
கல்லுவ காகம் வந்து கலப்பன கமலக் கண்ணன்
வில்லுமிழ் பகழி[2] பின்னர்[3] விலங்கெழி[4] லலங்கன் மார்பம்
புல்லுவ களிப்புக் கூர்ந்து[5] புலவுநா றலகை யெல்லாம்[6]

கொண்டுகூட்டு: வந்து கலப்பன, கமலக்கண்ணன் வில் உமிழ் பகழி. மதுரமாற்றம் சொல்லுவ, உன் கண்ணைத் துண்டத்தாற் கல்லியுண்ணும் காகங்கள். (உன்) விலங்கு எழில் அலங்கல் மார்பம் களிப்புக்கூர்ந்து புல்லுவ, புலவுநாறு அலகையெல்லாம்.

பொருள்: (உன்னோடு சிரிப்பன, என் தலைவனுடைய பயங்கரமான பாணங்களே.*) உன்னோடு கூடுவன (வும் அந்த) ராம பாணங்களே. இனிய வார்த்தைகள் கூறுவன (அப்பாணத்தாலிறந்த) உன்னுடைய கண்ணை மூக்கினால் தோண்டி உண்ணுங் காகங்களே. (இராமபாணங்கள் அழைத்த) உன் மாலையணிந்த மார்பைத் தழுவுவன பிணந்தின்னிப்பேய்களே.

மாற்றம் - சொல். துண்டம் - மூக்கு. கல்லுதல் - தோண்டுதல். கமலக்கண்ணன் - தாமரைமலர்போலுங் கண்களையுடையவன் - இராமன். உமிழ்தல் - வெளிப்படுத்தல் (தமிழகராதி). பகழி - அம்பு. விலங்குதல் - இலகுதல் (தமிழகராதி) - இலங்குதல் - விளங்குதல். அலங்கல் - மாலை. புல்லுவ - தழுவுவன. கூர்ந்து - மிகுந்து. புலவு நாறு அலகை (பிணம் தின்னுதலால்) புலால்நாற்றமடிக்கும் பேய்.

---

* இதற்கு முந்தியபாட்டில் 'நகுவன நின்னோடையன் நாயகநாம வாளி' என்பதன் கருத்து.

'உண்டு' 'கல்லுவ' என்பவைகளை இடம்மாற்றி விகுதிபிரித்துக்கூட்டி, 'கல்வி உண்ணுவ (ன ஆகும்)' எனக்கொண்டு பொருள்செய்திருப்பது காண்க.

'காகம் கர்ணகடூரமாகக் கத்துவனவற்றையும் பிற குறிப்புவகையால் "சொல்லுவ மதுரமாற்றம்" என்கிறாள்.' வை. மு. கோ.

பாடபேதம்: [1] கொத்திக், உண்டே, உண்டு, உன்றன். [2] கணைகள். [3] வந்துன், உன்றன். [4] விலங்கலின். [5] கூர்வ, கூரப், சாலப், கூர்ந்த. [6] போலாம்.

111 புன்மக[1] கேட்டி கேட்டற் கினியன[2] புகுந்த போரின்
உன்மக னுயிரை யெம்மோய்[3] சுமித்திரை யுய்ய[4] வீன்ற
நன்மகன் வாளி நக்க நாயவ னுடலை[5] நக்க[6]
என்மக னிறந்தா னென்ன நீயெடுத் தரற்ற[7] லென்றாள்.

கொண்டுகூட்டு: 'புன்மக, (நான்) கேட்டற்கினியன கேட்டி, (அவை,) புகுந்த போரில் எம்மோய் சுமித்திரையீன்ற நன்மகன்வாளி உன்மகன் உயிரை நக்க, நாய் அவன் உடலை நக்க, "என்மகன் இறந்தான்" என்று நீ எடுத்து அரற்றல்(கள்)' என்றாள்.

பொருள்: 'கீழ்மகனே! (உன்வாயிலிருந்து நான் கேட்டற்கு இனியவை யாவையெனக் கூறுகிறேன்) கேட்பாயாக. (அவை, இப்போது) தொடங்கியிருக்கிற யுத்தத்திலே, சுமித்திரை புத்திரன் (இலக்குமணப்பெருமானின்) அம்புகள் உன்மகன் (இந்திரசித்தின்) உயிரைக் குடிக்க, நாய்கள் அவன் உடலை நக்க, "என் மகன் செத்தா"னென்று நீ கதறிப்புலம்பும் புலம்பல்களே (அன்றி, 'உன் பெருத்த கழுத்தில் ஒட்டிக்கொண்டிருக்கின்ற, பிளந்த வாயோடுகூடிய தலைகள் ராமபாணங்களால் வெட்டிவீழ்த்தப் பட்டுச் செத்தொழிந்தா'யென்று அநுமன்வந்து செப்பும் வார்த்தைகளுமாம்*)' என்று கூறினாள்.

புன்மை - இழிவு; சிறுமை. புன்மக - இழிவும் சிறுமையும் உடையவனே. கேட்டி - கேட்பாய். மோய் - தாய்; இங்கே தாய்போல அன்புடைய மாமியைக்குறித்தது. உய்ய - (எல்லாரும்) நல்வாழ்வடையும்படி.

---

* இதற்கு முந்திய 'விரும்பிநான் கேட்பதுண்டு' என்ற பாட்டின் கருத்து.

ஈன்ற - பெற்ற. வாளி - அம்பு. அரற்றல் - புலம்புதல் (தமிழகராதி). எடுத்து அரற்றல் - (குரலெடுத்து) உரத்துப் புலம்பல்.

பாடபேதம்: [1] மகன். [2] உரியது, உரியன. [3] எம்மை. [4] என்ன. [5] நரியவனுடலம், நாய்களவ்வுடலை. [6] உன்னை. [7] என்னை யெடுத்தெடுத் தரற்றல்; என்னை யீ யெடுத்தழைப்பது.

## சீதையைக் கொல்ல ஓடிய இராவணனை மகோதரன் தடுத்தல்

[ இராவணன் (தன்னை இழித்துத் தன் சாவை விரும்புவதாகச்) சீதைகூறியதைக் கேட்டுச் சினந்து, கண்கள் தீப்பொறி சிதறவிழித்து, பற்கள் உதட்டில் அழுந்தக் கடித்து *வண்டுறுக்கிக் கொண்டு கொல்லுதல்குறித்துச் சீதைமீது சாடுதற்கு ஓடிய போது, 'தகப்பன் வேண்டினால், மகள் இசைவாள்; கோபியாதே' என்று கூறி மகோதரன் தடுத்தான். இராவணன் திரும்பிப்போய் ஆசனத்தில் அமர்ந்தான்.

## இராவணனுக்கு இசையும்படி சீதையை மாயாசனகன் வேண்டல்

அப்போது, இராவணனெதிரே சாட்டாங்கமாக வணங்கித் தரையிலே செத்தான்போற்கிடந்த மாயாசனகன், எழுந்து, சீதையைநோக்கி, 'இப்போது இராவணேசுரனுடைய வேண்டுகோளுக்கு இசையாமற்போவாயானால், என்னை என் குலத்தினோடு கொன்றாயாவாய்' என்று கூறிப் பின்னும் கூறுகின்றான். ]

112 பூவின்மே லிருந்த தெய்வத் தையலும் பொதுமை[1] யுற்றாள்
பாவியான் பயந்த நங்கை நின்பொருட் டாகப் பட்டேன்
ஆவிபோ யழித[2] னன்றோ[3] வமரர்க்கு மரச னானன்[4]
தேவியா யிருத்த[5] றீதோ[6] சிறையிடைத் தேம்பு கின்றாய்.[7]

கொண்டுகூட்டு: பூவின்மேலிருந்த தெய்வத்தையலும் பொதுமை யுற்றாள். பாவி! யான் பயந்த நங்கை நின்பொருட்டாக(ச் சிறை)ப்பட்டேன். (என்) ஆவிபோய் அழிதல் நன்றோ? அமரர்க்கும் அரசனானான் தேவியாய் இருத்தல் தீதோ? சிறையிடைத் தேம்புகின்றாய்.

---

* வண்டுறுக்குதல் - (உதட்டைமடித்துக் கடித்தல்) சினங்கொண்டார் செயல்.

பொருள்: (ஐசுவரியத்தின் அதிதேவதையான) இலக்குமி தேவி, (பரமைசுவரியமுடைய திருமாலுக்குமட்டுமன்றி, ஐசுவரிய முடையாரனைவருக்கும் உரிமையானவளாய்ப்) பொதுவாந்தன்மை பொருந்தியுள்ளாள். (நீயும் அவள்தன்மையளாதல் தகுதியாம். அவ்வாறாகாமல் உன்னையும் உன்னைச் சேர்ந்தாரையும் கெடுக்கின்றாய்.) பாவீ, யான் பெற்றபெண்ணாகிய நீ (இராவணாசுரனுக்கு இணங்காமை) காரணமாக (அவன் ஆணையால்) சிறைப்படுத்தப் பட்டேன். (இனிமேலும் இணங்காயானால், நான் கொல்லப்பட்டு என் உயிர் போய்விடும். அப்படி, யான்) உயிர்போய் அழிதல் நன்றோ? (பூலோகத்தாருக்கன்றித்) தேவலோகத்தாருக்கும் அரசனாகியுள்ளவனுக்கு நீ தேவியாக இருத்தல் தீதோ? (ஏன் வீணாகச்) சிறையிற்கிடந்து வருந்துகின்றாய்?

பயந்த - பெற்ற, நங்கை - பெண்ணிற் சிறந்தாள். படுதல் - அகப் படுதல். ('பத்திவலையிற்படுவோன்' திருவாசகம்.) பட்டேன் - (சிறையில்) அகப்பட்டேன்; 'சிறைப்பட்டேன்' என்பதன் சுருக்கமுமாம். 'பட்டேன்' என்பதைக் காலவழுவமைதியாகக்கொண்டு 'இறந்துவிடுவேன்' என்று பொருள்கூறலும் உண்டு.

பாடபேதம்: [1] புதுமை. [2] அழிகை, அழிய. [3] நன்றே. [4] அரசனுவர்ன். [5] இருக்கை. [6] தீதே. [7] தேம்புகின்றீர்.

[ மேற்கூறியவாறு கூறி, மாயாசனகன், 'என்னை என்குலத்தினோடு உயிரோடிருந்துவாழவும் நிலையாகச் செல்வமனுபவிக்கவும் செய்து, உன்னையும் சிறையினின்றும் நீக்கி, இன்பமுறச்செய்வாயாக' என்று சீதைகாலடியில் வீழ்ந்து வேண்டினான்.

மாயாசனகன்கூறிய வார்த்தைகளைக் கேட்ட சீதை, செவிகளைப் பொத்திச் சினங்கொண்டு, 'என் தந்தை இந்த வார்த்தைகளைச் சொல்லமாட்டான். (பைத்தியங்கொண்டார், உருவம் மாறாது அறிவுமாறுதல்போல, என் தந்தை, புத்திமாறியதனால் இந்த மானக்கேடானவார்த்தைகளைச் சொன்னான். இராவணன்

காலிலும் என்காலிலும் விழுந்து வணங்கியதும் புத்திமாறியத ஞலேதான், இவன் என் தந்தையென்பதை அறவே மறந்து, இவனுக்குத் தன்புத்தி திரும்பவரும்படி கடிந்துபேசுதல் அவசி யம்)' என்று பின்வருமாறு கூறுவாளானாள். ]

113 அறங்கெட வழக்கு நீங்க வரசர்த மரபிற்[1] கான்ற[2]
மறங்கெட மெய்ம்மை[3] தேய வசைவர[4] மறைக ளோதுந்
திறங்கெட வொழுக்கங் குன்றத் தேவரும் பேணத் தக்க
நிறங்கெட வினைய சொன்னாய் சனகன்கோ னினையி னையா.[5]

கொண்டுகூட்டு: 'ஐயா! அறம் கெட, வழக்கு நீங்க, அரசர்தம் மர புக்கு ஆன்ற மறம் கெட, மெய்ம்மை தேய, வசை வர, மறைகள் ஓதும் திறம் கெட, ஒழுக்கம் குன்ற, தேவரும் பேணத்தக்க நிறம் கெட, இனைய சொன் னாய். நினையின் (நீ) சனகன் கொல்'.

பொருள்: தந்தையே! தருமம் அழியவும், (தொன்று தொட்டு வழங்கிவருகிற) வழக்கம் ஒழியவும், மன்னர்வமிசத் துக்குச் சிறப்பாகவுள்ள வீரம் சிதையவும், சத்தியம் கெடவும், பழிச்சொல் உண்டாகவும், வேதநெறி தவறவும், ஒழுக்கம் குன்ற வும், விண்ணவரும் விரும்பத்தக்க புகழ் தொலையவும், இப்படிப் பட்ட (இழிந்த) வார்த்தைகளைக் கூறினாய். ஆராய்ந்துபார்க்கும் போது, (நீ தோற்றத்தால் சனகனாகவும் சொற்களாலும் செயல்க ளாலும் சனகனுக்கு நேர்மாறானவனாகவும் இருக்கிறாயாதலால்) நீ சனகன்தானோ? (என்ற சந்தேகம் உண்டாகின்றது.)

அறம் - தருமம். மரபு - வமிசம். ஆன்ற - மாட்சிமைப்பட்ட (தமிழக ராதி). மறம் - வீரம். மெய்ம்மை - உண்மை. மறை - வேதம். திறம் - வழி, கோட்பாடு (தமிழகராதி). பேணுதல் - விரும்புதல். நிறம் - புகழ் (தமிழக ராதி); நிறக்கேடு - புகழ்க்குறைவு (தமிழகராதி). இனைய - இத்தன்மை யான (வார்த்தைகள்). கொல் ஐயப்பொருளது.

பாடபேதம்: [1] மரபுக்கு, அமைவுக்கு. [2] ஆன. [3] வன்மை, மென் மை. [4] உற. [5] சனகன்கொ னீயு மையா, நீகொலாஞ் சனக னென்பான்.

114 நீயுநின் கிளையு மற்றிந்[1] நெடுநில வரைப்பு[2] நேரே
மாயினு முறைமை குன்ற வாழ்வனோ[3] வயிரத் திண்டோள்
ஆயிர நாமத் தாழி யரியினுக்[4] கடிமை செய்வேன்[5]
நாயினை நோக்கு[6] வேனோ நாண்டுறந் தாவி[7] நச்சி.

கொண்டுகூட்டு: *நீயும் நின்கிளையும் மற்று இந்நெடுநிலவரைப்பும் நேரே மாயினும், முறைமைகுன்ற வாழ்வனோ! வயிரத் திண்தோள் ஆயிரம் நாமத்து ஆழி அரியினுக்கு அடிமைசெய்வேன், ஆவி நச்சி நாண் துறந்து நாயினை நோக்குவேனோ!*

பொருள்: *நீயும் உன் சுற்றத்தார்களும்* (உங்களையுள்ளிட்ட) *இந்தப் பெரியபூமியிலுள்ளாரெல்லாரும்* (என்கண்ணுக்கு) *நேரே சாவதாயிருந்தாலும்* (அப்படிச் சாவதை நான் ஒழுக்கத்தைக் கைவிடுதலால் தடுக்கக்கூடுமாயினும்) என் ஒழுக்கங்கெட வாழ்வேனோ! (ஒழுக்கங்கெடுமுன் உயிரைவிடுவேன்.) பேராயிரமுடைய பெருமானுக்கு அடியேனான யான் உயிர்மேலாசைகொண்டு (அதைக் காத்தற்காக) நாணத்தைக் கைவிட்டு நாயை(ப் போல்வானை)க் கண்ணெடுத்துப் பார்ப்பேனோ!

கிளை - சுற்றம் - சுற்றத்தார் - உறவினர். நெடுநில வரைப்பு - பெரிய பூமி. வரைப்பு - எல்லை; உலகம். 'நெடுநிலவரைப்பு' அடையடுத்த ஆகுபெயராய்ப் பூமியிலுள்ளாரை உணர்த்தியது. நேரே - பிரத்தியட்சமாக. ஆயிரம் நாமத்து ஆழி அரி - ஆயிரம் பெயர்களையும் சக்கராயுதத்தையுமுடைய திருமால் (அவதாரமான இராமன்). துறந்து - விட்டு. நச்சி - விரும்பி.

*மாயாசனகனை, உருவம்பற்றி,* முதலில் 'ஐயா' என (மேல் 113-ம் பாட்டில்) விளித்து, மாறிய குணம்பற்றியும் அக்குணம் போய்ப் பழையகுணம் திரும்பிவருமாறு மிகவும் இழித்து விளித்தல் இன்றியமையாததென்று கருதியதுபற்றியும்,

* 'அரியொடு வாழ்ந்த பேடை அங்கணத் தழுக்குத் தின்னும்
நரியொடு வாழ்வ துண்டோ நாயினுங் கடைப்பட் டோனே'

---

* அரி - சிங்கம், இராமனைக் குறித்தது. பேடை - பெண், சீதையைக் குறித்தது. நரி, இராவணனைக் குறித்தது.

என, முடிவில் இழித்து விளித்து, புதிய இழிகுணம்போய்ப் பழைய உயர்குணம் திரும்பிவருவதற்குச் செய்யக்கடவது இன்னது எனச் சீதைசொன்னது, அடுத்தபாட்டில் வருகின்றது.

பாடபேதம்: [1] மற்ற. [2] வரைப்பின். [3] வாழ்வனே. [4] ஐயனுக்கு. [5] செய்தேன். [6] நாயினைத் தீண்டு, நாயினை நச்சு. [7] உயிரை.

115 அல்லையே[1] யெந்தை யானா யாகதா[2] லலங்கல் வீரன்
வில்லையே வாழ்த்தி மீட்கின்[3] மீளுது[4] மீட்சி யென்ப
தில்லையே லிறந்து தீர்து[5] மிதுவலா லியம்ப லாகாச்[6]
சொல்லையே யுரைத்தா யென்றும்[7] பழிகொண்டா யென்னச் சொன்னாள்

கொண்டுகூட்டு: 'எந்தையல்லையானாய்' தான் (என் தந்தை) ஆக, அலங்கல்வீரன்வில்லையே வாழ்த்தி, மீட்கின் மீளுதும்: மீட்சியென்பது இல்லையேல், இறந்துதீர்தும்; இது அ(ல்)லால் இயம்பலாகாச் சொல்லையே உரைத்தாய்; என்றும் பழிகொண்டாய்' என்னச் சொன்னாள்.

பொருள்: '(உன் இயற்கையறிவு மாறி உரைக்கத்தகாததை உரைத்தாயாதலால்,) நீ, என் தந்தையல்லாயானாய் (நீ, திரும்ப) என்தந்தையாகுதற்கு, சிறைப்பட்டுள்ள நாம் இருவரும் நம்மைச் (சிறைமீட்டற்கு வேறொன்றையும் நம்பாமல்) இராமன்வில்லையே (நம்பி, அதனையே) வாழ்த்துவேமாய், அவன் மீட்டால், மீளுவோம். (துரதிட்டவசத்தால் நமக்கு) மீட்சியென்பது இல்லாமற் போனால், இறந்தொழிவோம். (இதுவே, செய்யக்கடவது. நீ,) இதைச் சொல்லுவதைவிட்டு (வேறே) சொல்லத்தகாதவார்த்தைகளைச் சொன்னாய். (அப்படிச் சொன்னதனால், ஒருவனே அரசர்தலைவனும் அறிஞர்தலைவனுமாயிருந்த சனகன், உணர்வுகெட்டு ஒழுக்கத்துக்கு இழுக்கமாக, உரைக்கத்தகாததை உரைத்து ஊனமுற்றான் என்ற) என்றும் (நீங்காது நிலைத்த) பழியைப் பெற்றாய்' என்றாள்.

அல்லை - அல்லாய்: முன்னிலையொருமைக் குறிப்புவினைமுற்று. எந்தை- என் தகப்பன். ஆக - ஆகுதற்கு. தான், சீதைதந்தை யென்ற பொருள்பட நின்றது. அலங்கல்வீரன் - மாலை (உடைய, எனவே அணிந்த) வீரன். மீட்கின் - மீட்டால். மீளுதும் - மீளுவோம். தீர்தும் - ஒழிவோம்.

'தான் ஆக' என்பதைச் செய்யுளுக்கு இயைய 'ஆக தான்' என மாற்றினார். 'எந்தை அல்லை' என்பது 'அல்லை எந்தை' என மாற்றப்பட்டுவந்தது காண்க. 'தான்' என்பது, சொல்லத்தகாத வார்த்தைகளைச் சொல்லுதற்குமுன்னிருந்த சனகன், சீதை தந்தை யெனற்குரிய சனகன் என்ற பொருள் குறித்தது.

நீ சொல்லத்தகாததைச் சொன்னதற்குச் சென்றகாலம், கணப்பொழுது. அதனால் உண்டாகிய பழிநிற்குங்காலம், முடிவில்லாததென்பாள், 'என்றும் பழிகொண்டாய்' என்றாள்.

'என்றும் பழிகொண்டாய்' என மாயாசனகனைநோக்கிச் சீதை தான் கூறவேண்டியதைக் கூறிமுடித்ததனால், அவள் அவனை உண்மைச்சனகனென்றே நம்பியிருந்தாளென்பது தெளிவாம்.

பாடபேதம்: [1] அல்லையேல். [2] ஆகத்தால். [3] தொழுதுவாழ்த்தி, வாழ்த்திமீளின். [4] மீள்வது, மீளுதி. [5] தீர்தி. [6] இயம்பலாத. [7] என்னும்.

## இராவணன் மாயாசனகனைக் கொல்லப்போதல்

[ இராவணன், சீதை மாயாசனகனை நோக்கிக் கூறியதை மனத்துட்கொண்டு, அவளைநோக்கி 'நீ, "உன் தந்தையல்லன்" என்றுசொன்ன இவனை இதோ கொல்கிறேன்பார்' என்று உடைவாளை உருவினான். சீதை சிறிதும் கலங்கவில்லை.

## மகோதரன் தடுத்தல்

அப்போது, மகோதரன், இராவணனைநோக்கி 'இவன் உன் கருத்துக்கிசையும்படி மகளை வேண்டிக்கொண்டான்; ஒரு பிழையும் செய்யவில்லை. இவனைக் கொல்லுதல் உனக்கு ஒரு பொருட்டன்று; ஆயின் இப்போது இவனைக் கொன்றுவிட்டால், நீ இராமனைவெல்ல, இவள் (வென்றவர்க்குரியர் மெல்லியலாரென்றவாறு) உன்வசமானபோது, தந்தையை நினைந்து வருந்துவாள்; (அதனால் உன்மகிழ்ச்சி குன்றுமன்றோ?) என்று கூறி விலக்கினான்.

## கும்பகருணனை இராமன்கொல்ல வானரர் ஆரவாரித்தல்

அப்போது, கும்பகருணனை இராமன்கொல்ல, வானரரும் வானவரும் ஆரவாரித்த பேரொலி, இராவணன் இருபதுசெவிகளிலும் விழுந்தன. அந்தப் பேரொலியோடு இராமலக்குமணர்

வில்நாண் ஓசையும் மிகுதியாகக் கேட்க, இராவணன், போர்க்குச் சென்ற தம்பி (கும்பகருணன்) தனிப்பட்டு அபாயத்துக்குள் ளாளுன்போலுமென்று வருந்தும்போது, தூதர்கள்வந்து, காதருகு சென்று, வேறெவரும் கேளாதபடி, 'வானரசைனியத்தை நாசம் செய்து, கும்பகருணன் இராமனம்பால் இறந்தான்' என்று மெல்ல ஓதினார்கள்.

## இராவணன் பூமியில் விழுந்து புலம்பல்

ஒரு பெரு மராமரம் கிளைகளோடும் தூரோடும் வேரோடும் பறிந்துவீழ்ந்தாற்போல, இராவணன், (கையும் மெய்யும் காலும் தரையிற் படிய) விழுந்தான். பிறந்த அந்நாள்தொட்டு, இறந்த இந்நாள்வரையும், தன்னை விட்டுப் பிரியாமல், (உடலிரண்டேயன்றி) உயிரொன்றேயெனத் தன்னோடு ஐக்கியமாக வாழ்ந்த தம்பியின் சாவு (இயற்கையாகநிகழ்ந்திருந்தாலும் பொறுக்கமுடியாதது) போர்க்களத்திலே தன்பொருட்டு நேர்ந்ததேயென்று துன்புற்றுப் புலம்பலானான்.

'தம்பீ! உன்னைப்பற்றி இந்த வார்த்தையும் (இறந்தாயென்பதையும்) கேட்கும்படியிருந்ததே!* (உன் பக்கத்திலிருந்து) உனக்கு ஆபத்துவந்தபோது தடுத்துக் காக்குங்கடமையுடையயான், நீ இறக்கும்பொழுது உன்னெதிரேயில்லாதேனாய்த் தூரத்திலேயிருந்து என்னுயிரைப் பாதுகாத்துக்கொண்டிருந்தேனே!

† உன்னிலைமை ஈதாயின் ஓடைக் களிறுந்திப்
பொன்னுலகம் மீளப் புகாரோ புரந்தரனார்!

மின் அஞ்சு வேலாய் விழியஞ்சி வாழ்கின்றார்
தம்நெஞ்சம் தாமே தடவாரோ தானவர்கள் §

---

* எம்பியோ! யான் உன்னை இவ்வுரையுங் கேட்டேனே
(இப்படலம் எஅ).

† (ஈது, - சாவு. ஓடை - நெற்றிப்பட்டம். களிறு - (வெள்ளை) யானை. உந்தி - செலுத்தி. மீள - திரும்ப. புரந்தரன் - இந்திரன்.)

§ தானவர்கள் - அசுரர். விழி அஞ்சி வாழ்கின்றார் - (உன்னைப்) பார்த்தற்குப் பயந்து வாழ்கின்றார். விழி - பார்த்தல் (முதனிலைத் தொழிற்பெயர்); பார்த்தலுக்கு (நான்காம்வேற்றுமைத்தொகை). அவர்கள் நீ இறந்தது தெரிந்து அச்சந்தீர்ந்து தம்நெஞ்சைத் தடவிக்கொள்ளாரோ.)

(தேவரும் தேவதேவர் மூவரும் அஞ்சும் வலிமையுடைய) நீ அற்பமனிதனால் இறந்தாயென்ற சொல்லன்றோ என்னைச் சுடுகின்றது'* சிவபிரான் சூலாயுதமும் திருமால் சக்கராயுதமும் இந்திரன் வச்சிராயுதமும் உன் உடலைத் தாக்கிக் கூர்மழுங்கித் தெறித்தோடினவே. அப்படிப்பட்ட உன் உடம்பை உருவுதற்கு, எப்படி ஒரு மனிதனுடைய மெல்லம்பு வல்லதாயிற்றோ! என் தங்கை மூக்கிழந்ததற்கு உயிர்விடாமல், தம்பிமாரும் (கரன் முதலியோரும்) மாமனும் (மாரீசனும்) இறந்ததற்கும் உயிர்விடாமல் மானமின்றி வாழ்ந்தேன்; ஒரு பெண்ணின்மேல்வைத்த ஆசையினால் இப்படிப்பட்ட மானவீன வன்னெஞ்சனேன், உன்னையிழந்தபின்னும் உயிரோடிரேனோ!

உன்னால் இராமன், இலக்குமணன், அனுமன், சுக்கிரீவன், நீலன், சாம்பன் ஆகிய இவர்களெல்லாரும் புகமொழிய உயிரிழந்தார்களென்றுகேட்பேனென்றிருந்தேனே. அந்தோ! (அவர்களொருவரும் கொல்லப்படாமல்) நீ கொல்லப்பட்டாயென்று கேட்கலானேனே! அரசமாளிகையிலே, அழகிய மாதர் அடிவருட, குளிர்ந்த தென்றற்காற்று உடல்வருட, மலர்மெத்தைமீதே சயனித்திருந்த நீ, போர்க்களத்திலே புழுதிப்படுக்கையிலே தூங்குகின்றாயோ!

எனக்காக நீ இறந்தாய்! உனக்காக நான் இறந்து, நீ என்னைப் பிரிந்து பரலோகத்துக்குத் தனியேபோகவிடாமல், தாமதியாது, உன்னைத் தொடர்ந்துவந்திட்டேன்! மதயானைநிகர்வோனே, வந்துவிட்டேன்'† என்று புலம்பினான்.

## இராவணன் புலம்பல்கண்டு சீதை பூரித்தல்

இவ்வாறான சொற்களைச்சொல்லி வான்முகடுவரையிலும் எட்டும்படி கூக்குரலிட்டழுது தன் பெயரின்காரணத்தை (இராவணம் -

---

* இப்படலம் அக.

† ..............................நானும் உனக்கு ஆவி
தந்தேன் பிரியேன் தனிபோகத் தாழ்க்கிலேன்
வந்தேன் தொடர மதகளிறே வந்தேனால். (இப்படலம் அரு.)

அழுதல்; இராவணன் - அழுகையன்: என்பதை)த் தெரியச் செய்தான். அவன்புலம்பலைக் கேட்ட சீதை, வாய்துடிக்க, மயிர் பொடிக்க, உடல் தடிக்க, (கொடிய பகைவனாயினும், துக்கப்படுபவனெதிரே மகிழ்ச்சியை வெளிப்படக்காட்டுதல் தகாதென்று) மனத்துக்குள்ளே மகிழ்ந்துகொண்டாள். (பயத்தினால் மகிழ்ச்சியை வெளிக்காட்டாதிருந்தாளல்லள், இந்திரசித்து இறந்தானென்று இராவணன் கதறுதலையும், இராவணன் இறந்தானென்று அநுமன் கூறுதலையும் கேட்க வேட்கையுடையேனென்று இராவணனைநோக்கிக் கோபித்துக்கூறியவளாதலால்.) ]

116 கண்டாள் கருணனைத்தன்[1] கண்கடந்த தோளானைக்
கொண்டா ளொருதுணுக்க மன்னவனைக்[2] கொற்றவனார்
தண்டாத வாளி தடிந்த தனிவார்த்தை[3]
உண்டா ளுடறடித்தாள் வேறேருத்தி யொக்கின்றாள்.

கொண்டுகூட்டு: (கும்ப) கருணனை (யும்) கண்கடந்த தோளா (னை இராம) னையும் (முன்) கண்டாள், ஒரு துணுக்கங்கொண்டாள், (ஆன சீதை, இப்போது,) அன்னவனை (கும்பகருணனை)க் கொற்றவனார் தண்டாத வாளி தடிந்த தனிவார்த்தை(யை) உண்டாள்; உடல் தடித்தாள், வேறொருத்தி ஒக்கின்றாள்.

பொருள்: (முன் கும்பகருணன் போர்க்களத்துக்குப்போயிருக்கிறானென்று கேட்டபோது, தன் மனக்கண்முன்னே - மனோபாவனையிலே மிகப்பெரிய தேகமுடைய அந்தக்) கும்பகருணனையும் கண்பார்வைக்கு அடங்காத (விசாலமான) தோள்களையுடைய இராமனையும் (ஒருவரோடொருவர் பொருகிறதற்கு எதிரெதிராக நிற்பதாகக்) கண்டு, (ஓகோ, இந்தப் பிரமாண்டமான ராட்சசனால் இராமனுக்கு என்ன தீங்கு நேருமோ என்று) திடுக்கிட்டாளான சீதை, கும்பகருணனை இராமபாணம் கொன்ற (தாக, இப்போது இராவணன்புலம்பிய) வார்த்தையை* (அமுதமாக மனவயிறுரச் செவிவாயால்) உண்டாள். (அதனால்) உடம்பு பூரித்தாள். (அவளை, முன்பார்த்தவர்கள், இப்போது பார்ப்பார்களானால், அடையாளமறியாதவண்ணம்) வேறொருத்திபோ லானாள்.

---

* இப்படலம். 82.

'கும்பகருணன்' என்பது செய்யுளுக்கியையச் சுருக்கமாகக் 'கருணன்' என நின்றது. கண்கடந்ததோள் - கண்பார்வைக் கடங்காத (விசாலமுடைய) தோள். துணுக்கம் - திடுக்கம் - அச்சம். கொற்றம் - வெற்றி. கொற்றவன் - வெற்றியாளன். தண்டுதல் - தடைப்படுதல் (தமிழகராதி). வாளி - அம்பு. தடிதல் - அழித்தல் - கொல்லுதல் (தமிழகராதி).

போரிலே முக்கியமாக உதவும் உறுப்பு, தோள் ஆதலால், மற்றையுறுப்புக்களைவிட்டு அதனை எடுத்துரைத்தார். போரைத் திறமாக நடத்துதற்குச் சாதாரணமான தோளிலும் விசாலமான தோள் வன்மையுடையதென்பது குறிக்கக் 'கண்கடந்ததோள்' என்றார். 'வண்டிசைக்கும் கூந்தல் மதர்விழிகள் சென்றலவ - எண்டிசைக்கும் காணு திடம்' என, மாதர்கண் விசேடிக்கப்பட்டிருக்கின்றது. அப்படிப்பட்ட 'கண்கடந்ததோள்' என்று கூறித் தோளின்விசாலத்தைப் பாவிக்கச்செய்த கவிநயம் பாராட்டத் தக்கது.

பாடபேதம்: [1] கண்டாளக் கண்ணனைத்தன், [2] அன்றவனைக், [3] தனிப் புழுதி.

## இராவணன் கோபக்கூற்று

[ (கும்பகருணன் இறந்ததற்கு வருந்திப்புலம்பிய) இராவணன், 'என் அம்புகளைச் செலுத்தி (என் தம்பி கொல்லப்படுதலைத் தடுக்காதுவிட்ட) எல்லாரையும் கொன்று (என் தம்பியைக் காவாது சாக விட்ட) மும்மூர்த்திகளையும் தேவரெல்லாரையும் சிறையில் அடைப்பேன்' என்று சீறினான். அப்போது மந்திரிமார்களின் இதோபதேசத்தால் கோபம் சிறிதுகுறைந்து, (போரிற் சம்பந்தப் படாதவர்களைத் தண்டிக்குங் கருத்தைக் கைவிட்டு) 'இராமலக்குமணருடைய இரத்தத்தைக்கொண்டு என் தம்பிக்கு என்கையால் நீர் இறைப்பதாகிய தர்ப்பணஞ்செய்வேன்' என்று கோபத்தோடு கூறிக்கொண்டு, தன் இருப்பிடம் சென்றான்.

## மகோதரன் போதல்

'கும்பகருணன் இறந்துவிட்டதனால், (இந்தச் சமயத்தில் இந்தச் சனகனைப்பற்றி முடிவுசெய்தற்கில்லை. சீதையைச் சிறையில்

வைத்திருப்பதுபோல) இவனை வேறொருசிறையில் வையுங்கள்' என்று காவலாளருக்குக் கட்டளையிட்டுவிட்டு, மகோதரன் (இராவணன்சென்ற திசையல்லாத) மற்றொருதிசைநோக்கிப் போனான்.

## திரிசடை சீதையைத் தேற்றல்.

சிறையிலிருந்த சீதைக்குத் துணையாக இருந்த விபீடணன் மகளாகிய திரிசடையென்பாள், இராவணன்முதலியோர் போனவுடனே, 'அம்மா, உன்தந்தையாக உருமாறி வந்தவன், மாயை வல்ல மருத்தனென்ற அரக்கன்' என்றுகூறிச் சீதையைத் தேறச் செய்தாள். ]

## மாயாசனகப்படலம் முற்றியது.

### குறிப்பு:—

கம்பராமாயணம், உத்தமகாவிய காம்பீரியமும் அளவற்ற சிறந்த நாடக நயங்களும் ஒருங்கமைந்து, காவியசிகாமணியென்றும் நாடகமணிமாலையென்றும் விதந்துகூறத்தக்க மேம்பாடுடைய தலைமைப்பேரிலக்கியமாக விளங்குவது. அதனில், பல காட்சிகளடங்கிய பல அங்கங்களுள்ள நாடகங்கள் பல அமைக்கப்பெற்றிருக்கின்றன. அந்த நாடகங்களிலே சிறந்த ஒன்று, **மாயாசனகப் படலம்.**

சென்னை நவயுகம் பிரசுராலயத்தார் வெளியிட்டிருக்கிற, கம்பனையும் கம்பராமாயணத்தையும்பற்றிப் பல அறிஞர் எழுதிய கட்டுரைகள் அடங்கிய 'கம்பன்கவிதை' என்ற புத்தகத்தில் திருவாளர், அ. நா. மகரபூஷணம் அவர்கள் B.A., B.L., எழுதியிருக்கிற 'மாயாசனகன்' என்ற கட்டுரையின் இறுதிப்பகுதி இங்கு நோக்கத்தகும். அது,

'மாயாசனகன்கதை, கம்பருடைய சிருஷ்டி; வால்மீகிமுனிவரால் சொல்லப்படவில்லை. மாயாசீதையைக்காட்டி, இராமலக்ஷ்மணர்களைத் துன்புறுத்தும் கதையை இரண்டு மகாகவிகளும் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் வால்மீகி மாயா இராமன் கதை ஒன்று சொல்லுகிறார். மகாமாயாவியான ஒரு அரக்கனைக்கொண்டு வெட்டப்பட்ட இராமன்தலை ஒன்றும் நாணேற்றின

'கோதண்டம் ஒன்றும் நிருமிக்கச்செய்து, அவற்றைச் சீதைக்குக்காட்டி, சீதையை மாயம் செய்ய, இராவணன் முயற்சிசெய்கிறான் என்றும், அவசரமாக மந்திரிகளால் அழைக்கப்பட்டு, இராவணன் சென்றதும், மாயத்தலையும் வில்லும் மறைந்தன என்றும், விபீஷணன்மனைவி சீதையைத் தேற்றுகிறாள் என்றும் இவ்வரலாறு சொல்லப்பட்டிருக்கிறது. இந்திரசித்தன்விட்ட பிரமாஸ்திரத்தால் இறந்தவர்போலவே கட்டுண்டுகிடக்கும் லக்ஷ்மணனையும் வானரவீரர்களையும், லக்ஷ்மணன்நிலையைக்கண்டு இறந்ததுபோல் மூர்ச்சித்துக்கிடக்கும் இராமனையும் காட்டிச் சீதைக்குப் பெருந்துக்கத்தை விளைத்த வரலாற்றை வால்மீகியும் கம்பரும் வருணித்திருக்கிறார்கள். உண்மையான இராமனைச் சீதை இறந்ததாகக்கண்டு அடைந்த சோகத்தை வருணிக்கும் கம்பர், 'மாயாராமன்' கதையைக் கையாளவிரும்பவில்லை. அதற்குப்பதிலாக மாயாசனகன்கதையைச் சிருஷ்டித்துக்கொண்டார் என்று ஊகிக்கலாம்.............................கும்பகருணவதத்தின்போது இம்மாயாசனகன்கதையை இடையமைத்த கலைத்திறமை விசேஷமானது.
..........................................................................................

மாயாசனகன் கம்பனின் அற்புத சிருஷ்டி! கற்பனாசக்தியின் எல்லையை, கலைத்திறமையின் உச்சஸ்தானத்தை, கவிதாசன்னதத்தின் சிகரத்தை இப்படலத்திலே காண்கிறோம்' என்பதாம்.

[தொடரும்]

வெ. ப. சுப்பிரமணியமுதலியார்.

---

# பிழையும் திருத்தமும்.

செந்தமிழ்த் தொகுதி ௩௩-ல் உஎஉ-ஆம் பக்கத்து அ-ஆம் வரியில் வாழ்க்கைநிலையும் என்றிருப்பதை, அவருடைய வாழ்க்கை நிலையும் என்றும், ௯, ௧௦-ஆம் வரிகளில் அருமையும் அவரிடை வாய்ந்து என்றிருப்பதை அருமையும்வாய்ந்து என்றும் திருத்திப் படித்துக்கொள்க.

# யவனர்வரலாறு.

[ஸ்ரீ. த. இராமநாதபிள்ளை, B.A., (LOND.) அவர்கள்.]

[௨௯௮-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

## ஹாட்றியானுஸ் (கத்திரியன்) ஆட்சிக்காலம். கி. பி. 117—138

திராஜன் வயதில்முதிர்ந்தோனாயினும் இளங்கோவாக ஒருவனையும் நியமிக்காமல், பாதியரைப் புடைத்து, அரேபியரை அடக்கிப் புலம்பெயர்ந்து, சின்னாசியாவில் இறந்தானாகையால் மேன்மக்கள் யாரைத் தனிக்கோலனாகத் தெரிந்தெடுக்கலாமென ஆலோசித்தார்கள். திராஜன் கத்திரியனை நேசித்தானாகையாலும் திராஜன்மனைவி புளோற்றினா, திராஜன் தனது மரணசாதனத்தில் கத்திரியனுக்குத் தனிக்கோலுரிமையளித்தானென அறிவித்தாளாகையாலும் கத்திரியன் திராஜகுடும்பத்தினனாகையாலும் தனிக்கோலனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டான். கத்திரியன் படைவீரருக்குக் கொடையளிப்பதாக வாக்குறுதிசெய்யப் படைவீரரும் கத்திரியனைத் தனிக்கோலனென வாழ்த்தினார்கள். கத்திரியன் ஏதென்ஸ்நகரில் கற்றானாகையாலும் கிரேக்கருடைய ஆசாரங்களைப் போற்றினானாகையாலும் கிரேக்கனென வழங்கப்பட்டான். இவன், புதுப்பொருள்களையும் நாடுகளையும் நகரங்களையும் இயற்கை விநோதங்களையும் காண்பதில் இன்பம்விழைந்தோனாகையால், ஆட்சிநாடுகள் யாவற்றுக்குஞ் சென்று அங்குள்ள காட்சிகளைக் கண்டு குடிகளிடம் கண்ணோட்டமுடையவனாய்ச் செங்கோலோச்சினான்.

### கத்திரியன் நாடுகாணுதல்.

கத்திரியன், தானியூபிநதிக்கரையில் வதியும் பகைஞரை அடக்கப்போனானாக, இரைகிறீனஸ் என்பவன் அவனை அவன் வேட்டையாடும்பொழுதேனும் வேட்பிக்கும்பொழுதேனும் கொல்லத் தருணம்பார்த்திருந்தான். இதையுணர்ந்த மேன்மக்கள்

அவனையும் அவன் கேளிரையும் சிரச்சேதஞ்செய்தனர். கி. பி. 121-ஆம் ஆண்டு கத்திரியன் நாடுகாணப் புறப்பட்டான்; மேற்றிசை நோக்கிச்சென்று, 122-ல் பிரித்தானியாவில் தங்கி, ஐபீரிய கல்லிய நாட்டிலிருந்து, கிரேக்கநாடடைந்து, சின்னாசியாவிற்குச் சென்று, 126-ம் ஆண்டு உரோமாநகரத்துக்குத் திரும்பினான். கி. பி. 128-ம் ஆண்டு ஆபிரிக்கநாடுகளையும் காணிய சென்றான். பின்னர் 129-ஆம் ஆண்டு கீழ்த்திசைநோக்கிச் சென்று, கிரேக்கநாடு எகிப்து சின்னாசியா முதலிய நாடுகளைக் கண்டு, 134-ஆம் ஆண்டு உரோமாநகரத்துக்குப் புலம்பெயர்ந்தான். பிரித்தானியாவிலே கலிடோனியரை அக்கரைப்படுத்தற்குக் கல்லாலும் மண்ணாலும் மதிலமைத்து இடையிடையே அரண்களும் கட்டிக் காத்தான். அம்மதில் இங்கிலாந்திற்கும் கலிடோனியாவிற்கும் எல்லையாகிப் பிரித்தானியத் தீவை இருகூறாக்கியதெனத் தெரிகிறது. கத்திரியன் சர்மானிய தேச மதிலையும் புதுப்பித்தான். கிரேக்கநாட்டைக் கண்டபோது கிரேக்கநாட்டுப் பழைய விளையாட்டுக்களை ஏற்படுத்தினான். எகிப்தில் கழித்தகாலத்தில் கத்திரியன் காதலித்த இளைஞனொருவன் நீலநதியில் அமிழ்ந் திறந்தனனாக, அச்சிறியோனுக்கு ஒரு கோயில் அமைப்பித்துப் பூசனைசெய்வித்தான். கி. பி. 131-ம் ஆண்டு யூதர் பகைத்தெழும்ப, யூதரை எருசலத்துக்கு ஆண்டுக்கு ஒருமுறைக்கு மேற் செல்லக்கூடாதெனக் கற்பித்தான்.

## கத்திரியனது உள்நாட்டரசியல்.

கத்திரியன், கடிதவழியை (தபால்மார்க்கத்தை) ஏற்படுத்தித் தேசாந்தரங்களில் நடக்குஞ் செய்திகளையெல்லாம் அறிந்தான்; படைவீரரை வீரர்க்குரிய ஒழுக்கவரையறைகளைக் கடவாது தம் தலைவர்க்குக் கீழ்ப்படிந்தொழுகும்படி பண்ணினான்; அரசாங்கத்தலைவர்களையும் செங்கோல்செலுத்தும்படி கற்பித்து, நீதி செலுத்தாதோரை ஒற்றர்மூலம் அறிந்து தண்டித்தான்; நகர் காவற்றலைவனுக்கு உரிமைகள் பல அளித்து, அவனைத் தனிக் கோலனுக்கு அடுத்ததரத்தினனாக மதித்தான்; சான்றோர் சிலரைக் கூவி அமைச்சர்சுற்றமொன்றை நிறுவினான்; மேன்மக்கட்சபையை அதிகாரஞ்செலுத்தவிடாது, தானே எல்லா அதிகாரங்களையும்

செலுத்தினன்; கடன்பட்டோர் அரசாங்கத்தினர்க்கு இறுக்க வேண்டிய கடன்களை இறுக்கவேண்டியதில்லையென விளம்பினன்; மேன்மக்கட்சபையினரையும் இணைத்தலைவர் கீழ்த்தலைவர் சமயக் கணக்கர் முதலியோரையும் அரசியல்நடாத்தும்போது உத்தரீயத்தை அணிந்திருக்கும்படி கற்பித்தான்; கல்விபயிற்றுதற்கு வித்தியாசாலைகளை ஏற்படுத்தினன்; காமதேவதைக்கும் உரோமாபதித் தேவதைக்கும் வேறு பல தெய்வங்களுக்கும் கோட்டங்கள் சமைப்பித்தான்; கத்திரியன்மகன் 7 வயதுச் சிறுவனாகையால், வேறஸ் என்பவனை இளங்கோவாக்கினன்; அவன் வயதுமுதிர்ந்து இறந்தானாக, அந்தோநயினஸ் என்னும் மேன்மகனொருவனை இளங்கோவாக நியமித்தான்; கி. பி. 138-ல் கத்திரியன் காலஞ்சென்றான். படைவீரர் கத்திரியனைப் போற்றியமையாலும் அந்தோநயினஸ் இரந்துகேட்டமையாலும் மேன்மக்கள் கத்திரியனுக்குக் கோயிலமைத்தனர்.

## பிற்கால இலத்தின்நூல்வரலாறு.

அகஸ்தரின்காலம் இலத்தின்மொழியின் செம்மொழிக்காலமெனக் குறிப்பிட்டோம். இனிப் பிற்காலத்து இலத்தின்நூல் வரலாற்றைத் தொடருவாம். காயஸ் கலிக்கூலாவின்காலந்தொட்டு வெஸ்பாசியன்காலம்வரையும் குழப்பம் மிகுந்தமையாலும், புலவர்களைக் கொற்றவேந்தரும் வள்ளல்களும் புரக்காமையாலும், இலத்தின்மொழியும் ஒருவாறு வளர்ந்து முதிர்ந்தமையாலும், பிற்காலத்து லத்தின்மொழி நலங்குன்றித் தேய்ந்ததெனலாம்.

கைசர்குடும்பத் தனிக்கோலர்காலத்துக் கவியரங்கேறிய வேந்தர், குளோடியஸ் என்பவனும் நீரோ என்பவனும் என்க. குளோடியஸ் சில வரலாறுகள் எழுதினன். நீரோ சில பாடல்கள் பாடினன். கேர்பியுவோ, பௌலினஸ் என்போர் எழுதிய வரலாறுகள் சிறப்பில்லாதவை. அவை காலக்கிரமத்தில் அழிவெய்தின. றூவஸ் அலேச்சாந்தர்வரலாற்றைப் பத்துப்பாகமாக எழுதினன். தத்துவஞானியாகவும் அமைச்சனாகவும் திகழ்ந்த சேனக்கா உரைநூலாசிரியனாகவும் விளங்கினன். செனக்காவின் தந்தை ஒரு அணிநூல்வல்லோன். செனக்கா இயற்றிய வியாசங்களும் ஞான

நூல்களும் ஆழமுடையனவல்ல. தத்துவங்கள் அந்நூலின்கண் மாசற ஆராயப்படவில்லை. செனக்கா வீரச்சுவையும் அழுகைச் சுவையும் செறிந்த நாடகங்கள் பல இயற்றினன். செனக்கா எழுதிய ஆவேச கோர்கியூல்ஸ், அகமன்னன், யூடிப்பஸ், மீடியா எனப்படும் நாடகங்கள் யவனநூல்களிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டவைகளே. செனக்கா நகைச்சுவையும் இன்பச்சுவையும் விரவியநாடகங்களும் பல எழுதினன்.

கோமிலஸ் என்னும் ஐபீரியநாட்டுத் தலைவனொருவன் வேளாண்மையைப்பற்றிச் சிலநூல்கள் எழுதினன். வேசிலியஸ், கோருசியஸ், லுக்கிறீசியஸ் முதலிய செந்நாப்புலவர்கள் பாடிய பாடல்களுக்கு அலேறியஸ் புறேபஸ் உரையெழுதினன். கி. பி. 34-ல் தேவியஸ் பிளாக்கஸ் புலவர்கள்மீது வசைநூல்கள் இயற்றினன். அவை சொன்னயம் இல்லாதவை. லூக்கஸ் கைசர் பம்பிப் போரைக் காப்பியமாக இயற்றினன். அக்காப்பியத்தைக் குவின்றிலியஸ் என்னும் அணிநூல்வல்லோன் சொற்பொழிவேயன்றிச் செய்யுளல்லவெனக் கண்டித்தான். பெட்றேனியஸ் ஆபிற்றர் நகைச்சுவை விரவிய வசைநூல்கள்பலவற்றை இயற்றினன்.

## பிளாவியர்காலத்துப் புலவர்கள்.

பிளாவியர் மூவரும் தாய்மொழியை வளர்த்துப் புலவர்களைப் புரந்தனர். பிளினியஸ் செக்குண்டஸ் என்னும் மூத்த பிளினி வடஇத்தாலிநாட்டிற் பிறந்தான். பிளினி பலநூலறிஞனெனவும் நுண்ணறிவாளனெனவும் பாராட்டப்பட்டான்; அவன் சர்மானிய யுத்தவரலாற்றையும் தன்காலத்து உள்நாட்டுச் சரித்திரத்தையும் எழுதினன். பயிர்நூல் விலங்கியல்நூல்களும் இயற்றினன். கி. பி. 71-ஆம் ஆண்டு பௌதிகநூல் பூகோளநூல் மக்கள்விருத்திநூல் எனப் பலநூல்கள் எழுதினன்; சர்வம் பிரமம் என்னும் நம்பிக்கையுடையோனாகி ஆதித்தனே உலகமுழுவதற்கும் முதலெனச் சாற்றினன்.

புலேறியஸ் பிளாக்கஸ், சிலியஸ் இத்தாலிக்கஸ் என்னும் இருசிறுபுலவர்கள் முறையே அகஸ்தரைப்பற்றிய காப்பியமும் பினீசியப்போரைப்பற்றிய காப்பியமும் இயற்றினர். கி. பி. 69-ஆம்

ஆண்டு உரோமநகர் அழிக்கப்பட்டதைப் பப்பியஸ் ஸ்ராற்றியஸ் வர்ணித்தான். வலேறியஸ் மாசாலியஸ் ஐபீரியாநாட்டிற் பிறந்து வறுமையால் வருந்தினன். அவன் வஞ்சப்புகழ்ச்சியணிகள் செறிந்த வசை நூல்கள் பல இயற்றினன். அவனுடைய நண்பன் அறந்தியஸ்ரெல்லா என்பான் வலந்தைலா என்பவளைக் காமுற்றுக் காமச்சுவை விரவிய பாடல்களைப் பாடினன். பின்பு அவளை மணம்புரிந்துகொண்டான்.

## திராஜன்காலத்துப் புலவர்கள்.

கி. பி. 55-ஆம் ஆண்டு யூவினல் தீயொழுக்கத்தைக் கண்டித்து வசைநூல்கள் பதினாறு எழுதினன். கோணீலியஸ் இரசிற்றஸ் என்னும் வரலாற்றாசிரியன் கி. பி. 98-ஆம் ஆண்டு இணைத்தலைவர்களுள் ஒருவனாகத் தெரிந்தெடுக்கப்பட்டான். அவன், கைசர் குடும்பத் தனிக்கோலர்வரலாற்றைச் செப்பினன்; தன் மாமன் அக்கிரிக்கோலாவின் வாழ்க்கைவரலாற்றையும் விளம்பினன்; சர்மானியரின் சரித்திரத்தையும் எழுதினன். கி. பி. 78-ஆம் ஆண்டு அவன் 115 வரலாறுகளைப் பிரசுரஞ்செய்தான். அவனுடைய உரைநடை சுருங்கச்சொல்லல் என்னும் அழகுடையது. வரலாறுகள் ஆராய்ச்சிக்குறைவுடையன. பிளினியின் மருகன் இளைய பிளினி குவின்றிலியன் என்னும் அணிநூல்வல்லோனுக்குப் பொருளுதவிசெய்தான். பிளினி சில கடிதங்கள் வரைந்தான். யோசேபஸ் என்னும் யூதன் கிரேக்கமொழியில் தன் வாழ்க்கைவரலாற்றையும் ஈபுருமொழியில் யூதருடையவரலாற்றையும் எழுதினன். புளூற்றுக்கஸ் என்னும் கிரேக்கன், ஏதென்ஸ்நகரத்துப் பல்கலைக்கழகத்திற் கற்றான். அவன் கிரேக்கர்தலைவரும் உரோமர்தலைவருமான பலருடைய வாழ்க்கைவரலாறுகளை இயம்பினன். வியாசங்கள் பல எழுதியதுமன்றி, யவனநூல்கள் பலவற்றை இலத்தின்மொழியில் மொழிபெயர்த்தான்.

## கத்திரியன்காலத்துப் புலவர்கள்.

தனிக்கோலன் கத்திரியனும் சிறுநூல்கள் சில எழுதினன். கிரேக்கமொழியை வளர்த்தற்காக ஒரு கழகமேற்படுத்தினன். அக்கழகத்தில் அணிநூலோரும் தத்துவநூலோரும் கவிஞர்களும்

குழுமித் தத்தம் நூல்களைப் படித்து அரங்கேற்றினார்கள். கழகத்துக் கவிஞர்கள் பண்டைக்காலத்தூண்டையைப் போற்றினார்கள். அந்தோநயினன் தத்துவஞானம் போதிப்பதற்காகத் தத்துவநூல் வல்லோர்பலரை ஓம்பினான். மேலும், குதர்க்கர் மருத்துவர் இலக்கணநூலோர் அணிநூலோர் முதலியோரிடம் அரசிறை பெறுதலைவிட்டான். மாக்கஸ் அவுறிலியஸ் ஞானத்தைப்பற்றிப் பல வியாசங்கள் எழுதினான். குன்குவிலஸ் கைசரதுவாழ்க்கைவரலாற்றை எழுதினான். புளோற்றஸ் என்னும் பெயருடன் ஒரு புலவனும் ஒரு வரலாற்றாசிரியனும் இருந்தார்கள். பிறந்தோ என்னும் அணியாசிரியன் அவுறிலியனுடைய ஆசிரியனென்பர். மினுேசியஸ் பெலிச் என்பான் கிறிஸ்தவமதத்திற்கோர்மன்னிப்பென ஒரு நூலை நுதலினான். ஏரியானஸ் இந்திய பூமிசாஸ்திரத்தை யவனமொழியில் எழுதினான். கி. பி. 160-ல் ஐப்பியஸ் உரோமாநகரத்தின் வரலாற்றை யெழுதினான். அலெக்சாந்திரியாநகரத்துத் தோலேமி வானநூலொன்று இயற்றினான். 117-ஆம் ஆண்டு அரிஸ்திடிஸ் என்னுங் குதர்க்கன், தெமிஸ்டோக்கிள்ஸ் என்னும் அமைச்சன் வரலாற்றை யவனமொழியில் எழுதினான். அரிஸ்திடிஸ் பொருள்நயத்திலும் சொல்நயத்தைப் பாராட்டி விரிவுரைசெய்து பொருளீட்டினான். 125-ஆம் ஆண்டு லூக்கியஸ் என்னும் அணிநூல் வல்லோன் நாத்திகமதத்தை நாட்டுதற்குத் தேவர்சம்பாஷணை என்னும் நூலை எழுதினான். அந்நூல் அழகிய இனிய எளிய நடையில் எழுதப்பட்டது. யவனமொழியின் செம்மொழிக்காலம் யவனருடைய சுயாதீனம் அழிந்தவுடனே முடிந்ததெனலாம். இலத்தின் மொழி கி. பி. 3-ஆம் நூற்றாண்டுடன் தேயத்தொடங்கியதெனலாம். இவ்வளவில் இலத்தின் நூல்வரலாறு முற்றுப்பெற்றதெனலாம்.

## அந்தோநயினன் ஆட்சிக்காலம் கி. பி. 138—161

அந்தோநயினனுடைய ஊர் கல்லியாநாபோ. அவன், கி. பி. 147-ல் மாக்கஸ் ஔறீலியஸ் என்னும் தத்துவஞானியை இளங்கோவாக்கி, மரபுபற்றிக் கைசரென அழைத்தான். அந்தோநயினன் அரசியல்செலுத்தலில் திறமைவாய்ந்தோனல்லன். போர்ப்பிரியனல்லன். அவன் பொய் களவு கள் காமம் அரசதுரோகம் என்னும்

குற்றஞ்சாட்டப்பட்டோரை அடித்தும் இடித்தும் சுட்டும் வெட்டியும் துன்புறுத்தலாகாதெனக் கட்டளைவிடுத்தான். அவன் சமயப்பத்தி மிகுந்தோனாயினும் புறச்சமயத்தோராகிய கிறீஸ்தவர் முதலியோரைத் துன்புறுத்த விரும்பவில்லை. தன்மனைவி தவ்ளவாண்முகத்தாளை மிகவும் காதலித்தான். கி. பி. 140-ல் மனைவி இறந்தபின் அவளுடைய தோழியோடுகூடிக் களித்தான். தோழி சுயாதீனம்பெற்ற அடிமையாயினும், மணவுரிமைபெற இயலாதாகையால் மனைவியாகவில்லை.

## மாக்கஸ் ஔறிலியஸ் ஆட்சிக்காலம் கி. பி. 161—180

அந்தோநயினன் கி. பி. 161-ஆம் ஆண்டு இறக்க, மாக்கஸ் அவுறீலியஸ் தனிக்கோலைப் பெற்றான். மாக்கஸ் தலைநகரிற் பிறந்து அந்தோநயினனால் வளர்க்கப்பட்டான். புலன்வழிச்சேறலைக் கடிந்து கடமையைச் செய்து நல்வினைப்பயனைத் துய்த்தலே நல்வாழ்க்கை எனக் கூறும் ஸ்ரோயிக் மதத்தினனாகித் தியானத்திற் காலங்கழித்தான். அவன் கேலன் என்னும் மருத்துவனோடும் அளவளாவினன்; தத்துவநூல்வல்லோரோடு கலந்துபேசுதலில் இன்புற்றான்; தன்னயங்கருதல் தவறென்றும் பொதுநயங்கருதலே நல்லொழுக்கமென்றும் முழுநம்பிக்கையுடையவன்; ஞானநூல்களையும் ஒழுக்கநூல்களையும் படித்து இன்புற்று அரசியலைப் பொருட்படுத்தாதுவிட்டான். தன் தம்பி லூசியஸ் அவுறிலீயஸ் என்பவனைத் தன்னோடொத்த தலைவனாக்கினன். இருவரும் இணைத்தலைவராகத் தனிக்கோலோச்சினர். மாக்கஸ் ஔறீலியஸ் கத்திரியனைப்போலப் போரை வெறுத்துக் கொடைபளித்தலிலும் கோட்டம் அமைத்தலிலும் பொருளைச் செலவுசெய்தான். கி. பி. 165-ஆம் ஆண்டு பாதியர் போர்க்கெழுந்து உரோமர்படையை முறிய அடித்தனர். பின்னர் உரோமர்சேனை குறுக்களத்தில் வென்றியடைந்தது. இரிசிபன் என்னும் பாதியன் தலைநகரை உரோமர் கைப்பற்றினார்கள். உரோமர்படை தொற்றுநோய்வாய்ப்பட்டு அழிவெய்தியது. தொற்றுநோய் உரோமருடைய ஆட்சிநாடுகளிலிருந்து இத்தாலியாவிலும் பரவியது. உரோமாநகரத்திலும் இந்நோய் நனிபரவிற்று. பெருந்தொகையினரான சனங்கள் மாண்டனர். நாடோறும் ஆயிரக்கணக்கான சனங்கள் இறந்தனர்.

மக்கிறமேனியர் கி. பி. 166-ஆம் ஆண்டு போர்தொடங்கினர். போரில் உரோமர்சேனை தோல்வியடைந்தது. அடுத்த ஆண்டு தலைவரிருவரும் போர்க்களத்திற்குப் புறப்பட்டனர். கி. பி. 169-ல் லூசியஸ் மரிக்க, மாக்கஸ் உரோமாபுரத்திற்குத் திரும்பினான். கி. பி. 172-ல் மக்கிறமேனியர் தோல்வியடைந்தனராக, மாக்கஸ் சர்மானிக்கன் என்னும் பட்டத்தைப் பெற்றான். மக்கிறமேனியர் சர்மானியசாதியாராதலின் இப்பட்டம் சர்மானியரைவென்றோனென்பதைச் சுட்டும்.

சிரியநாட்டுத்தேசாதிபதி, மாக்கஸ் இறந்துபட்டானென அலர் பரப்பினான். அவனை மேன்மக்கட்சபையோர் கொல்வித்தனர். மாக்கஸ் அச்செய்தியைக் கேள்விப்பட்டு, அவனை மன்னித்திருக்கலாமென மொழிந்தான். கி. பி. 180-ஆம் ஆண்டு இரண்டாம் மக்கிறமேனியர்போர் நடந்தது. சற்றேணஸ் என்னும் உரோமர் தலைவன் சர்மானியரோடு பொருது வாகைசூடினான். பாசறையில் இருந்த மாக்கஸ் அவுறீலியஸ் பிணியால் இறந்தான். அவன் மகன் கொம்மோடஸ் உரோமாபுரத்திற்கு விரைந்தான். இக்காலத்தில் கிறிஸ்தவசமயம் அலெச்சாந்திரியாநகரிலும் உரோமாபுரத்திலும் பரவியது. அரசாங்கத்தினரால் கிறிஸ்துசமயவழிபாடு கண்டிக்கப்பட்டது.

## அந்நியமதக்கலப்பு.

அந்தோநயினர் ஔறிலியர் என்னும் தனிக்கோலர்காலத்தில் அந்நியதேசத்துச் சமயவழிபாடுகள் கண்டிக்கப்படவில்லை. நானாவித ஆராதனைகளும் பரவின. பல்வேறுதெய்வங்களும் வணங்கப்பட்டன. அத்தெய்வங்களைப் பொதுசனங்கள் வணங்கினராயினும், தத்துவஞானிகள் அவற்றை அஞ்ஞானிகளின் தெய்வங்களென இகழ்ந்தனர். அரசாங்கத்தோர் அவ்வாராதனைகள் தம்மாட்சியை நிலைநாட்டுவன என்று எண்ணிக் கண்டியாதுவிட்டனர். பலதெய்வக் கொள்கையும் தனித்தெய்வவழிபாடும் பிளேற்றோவின்மதமும் உலகாயுதமதமும் எனச் சமயவழிபாடுகள் பெருகின. தத்துவநூலோர் பிறநாட்டுத்தெய்வங்களைப் பொருட்படுத்தாமலும் உண்ணாட்டுப் பண்டைக்கிரியைகளை இழித்து நகையாடாமலும் தாம் சூழ் தியானத்தில் அழுந்தினர்.

உரோமராட்சி பல நாடுகளிலும் பரவியதாக, அந்நாடுகளில் வணங்கப்படும் தெய்வங்கள் இத்தாலியநாட்டினுள் நுழைந்தன. யவனநாட்டுச் சேயஸ் எகிப்துநாட்டுப் யாக்கஸ் பினீசியநாட்டுப் பரிதி: என்றற்றொடக்கத்துத் தெய்வங்கள் பல இத்தாலியதேசத்திலும் கோயில்பெற்றன. தனிக்கோலர் பலர் கல்லியர், நரபலியளிப்பவரென எண்ணினராதலின், கல்லியசமயத்தை அழிக்கமுயன்றனர். எவ்வெவ்வூர்களுக்கு உரோமர் சென்றார்களோ அங்கங்கெல்லாம் தம் சமயம் மொழி பழக்கவழக்கங்கள் முதலியவற்றை உடன்கொண்டே சென்றனர். உரோமருடைய கட்டிட அமைப்புக்களை ஐரோப்பியதேசங்கள் பலவற்றிலும் இன்றும் காணலாம். அரசாங்கத்தினர்மாத்திரமன்றிச் செல்வர்களும் மாளிகைகள் கட்டிச் சிற்பர்முதலியோரைப் புரந்துவந்தனர். இத்தகைய செல்வருட்சிறந்தோன் கரடோற்றஸ் அற்றிக்கஸ் என்னும் ஒரு வள்ளல். இச்செம்மலின் தந்தை ஏதென்ஸ் நகரில் பிறந்த ஒரு கிரேக்கன். அவனுக்கு ஒரு புதையல் அகப்பட்டது. அவன் தன் மகனை நன்முறையிற் கற்பித்தான். அற்றிக்கஸ் அறிவிற்சிறந்து பெரிய வள்ளல் ஆகினான்; நீர்க்குழாய் ஒன்றை உரோமாபுரத்தில் அமைத்து மக்களை வசியப்படுத்தித் தேர்தலில் இணைத்தலைமைப்பதவியைப் பெற்றான்; பின்னர் உரோமருடைய தனிக்கோலாட்சி செல்லும் பலநாடுகளிலும் கோயில்கள் கட்டுவித்தான். உரோமர் ஆட்சி உன்னதநிலையிலிருந்த அக்காலத்தில் பெருநகர்கள் 1197 எனக் கூறுப. பெண்கள் தம் அணிகளுக்காக எண்ணூறாயிரம்பொன் செலவுசெய்தனராம்.

இனி, உரோமர் தனிக்கோல் தேய்ந்து பின்னர் இருகூறாகிக் காலக்கிரமத்தில் அழிவெய்திய வரலாற்றைத் தொடர்வாம்.

மாக்கஸ் ஔறிலியன் என்னும் தனிக்கோலனைப் பலர் ஞானிவேடம்பூண்டு ஏமாற்றிச் சமயக்கோட்பாடுகளைப்பற்றிப் பேசி முகமன்கூறிப் பொருளும் பதவியும் பெற்றுத் தம் வாழ்நாளைப்

போக்கினர். மாக்கஸ் தத்துவஞானியாயிருந்தும் பலரால் ஏமாற்றப் பட்டான். அவன் தன் மனைவி, மகன், தம்பி முதலிய சுற்றத்தாரின் ஒழுக்கத்தைக் கண்டிக்கவில்லை. மாக்கஸ் தத்துவஞானியாதலின் ஆடம்பரவாழ்க்கையை வெறுத்தான். அவன் மனைவியோ ஐம்புல வின்பங்களை வெறுத்தாளல்லள். உருநலன்வாய்ந்தோர் இழி குலத்தோராயினும் காமுறுவள். ஔறிலியன் தன் மனைவி எத் தகையளென வுணராது அவளை நனிபுகழ்ந்தான். தன் மனைவியே இல்லக்கிழத்திகளிற் சிறந்தவளென நம்பினன். இப்பெருமனைக் கிழத்தியை அளித்த கடவுளை யென்றும் நினைந்து துதித்தான். அவள் இறந்தவுடன் அவன் துன்பக்கடலில் மூழ்கினன். மேன் மக்கட்சபை உடனே அவளுக்குக் கோயில் அமைத்து வழிபாடு ஏற்படுத்தியது,

## கம்மடஸ்.

மாக்கஸ் ஔறிலியனுடைய மகன் கம்மடஸ், தன் குலத்தைக் கெடுக்கவே பிறந்தான். தத்துவஞானிகளிடம் கற்றும் பயன் எய்திலன். கி.பி. 180-ல் கம்மடஸ் 15-ஆம் வயதில் தலைமைப் பதவியைப் பெற்று மக்கிறமேனியரோடு போர்நடாத்தப் புலம் பெயர்ந்தான். அரசனோடு கூடிச்சென்ற தூர்த்தர் பாசறைவாழ்வின் துன்பங்களைப் பலபடப்புனைந்தும் தனிக்கோலின்புகழே பகைவ ரைக்கெடுக்கப் போதுமெனப் புகன்றும் ஐம்புலவின்பங்களின் சுவையை எடுத்துரைத்தும் வேந்தனை உரோமாபுரம் திரும்பும்படி புத்திகூறினர். அமைச்சர் சிலர் போரை நடாத்தினர். இது இவ்வாறாக ஹூசியஸ் வேறஸ் என்போனின் கைம்பெண்ணும் மாக்கஸ் தனிக்கோலினின் தங்கையுமாகிய ஹூசில்லாவென்பாள், கம்மடஸ் என்னும் வேந்தனைக் கோறற்குத் தீயோனொருவனை ஏவினாள். மற்றேணஸ் என்னும் வீரனொருவன் வேந்தனைக் கொல்ல முயன்றான். கிளியாந்தர் என்னும் அடிமையொருவன் வேந்தனால்

மதிக்கப்பெற்றிருந்தான். அவன் பிறர்பொருள்வெளவவிரும்பித் தகுதியில்லோரைப் பொருள்பெற்று உத்தியோகங்களில் அமைத்தான். 189-ஆம் ஆண்டு நகரில் வற்கடம் நிகழ்ந்தது. கிளியாந்தர் காவல்வீரரைப் பொதுசனங்களைத் திரளவிடாது கலைக்கும்படி ஏவினான். கம்மடஸ், சிற்றின்பத்தில் அழுந்தி யாதுந்தெரியாது மயங்கியிருந்தான். அவனுக்குத் தமக்கை வதில்லாவும் அவனது காமக்கிழத்தியாகிய மாக்கியாவும் ஊர்நிலையை யெடுத்துரைக்கத் துணிந்தனர். இவ்வுதவிசெய்யாதிருந்தால் குடிகள் வேந்தனைக் கொன்றிருப்பார்கள். கம்மடஸ் கோர்க்கியூலுஸ் என்னும் தேவனின் நாமத்தைத் தான் புனைந்து, காட்சிக்களத்தில் விலங்குகளைத் தன் கையாற் கொன்று தற்புகழிற் களித்தான். அன்றியும், புகழ் பெற்ற போலன் என்னும் வாள்வீரன்பெயரால் தன்னை அழைக்கும்படி கற்பித்தான். பலநூறு மேன்மக்களைக் கொன்று கொடுங் கோலனானான். இக்கொடுங்கோலனுக்கு அஞ்சியோ அல்லது பொது மக்களின் பகையறிந்தோ ஹூசில்லா வேந்தனை நஞ்சூட்டித் தலை திருகுவித்தாள். தலைதிருகிய தீயோன் லாயற்றஸ் என்போன், வேந்தன் இரத்தக்குழாய் வெடித்து இறந்தானென மொழிந்து, காவலர்தலைவன் பேட்டினாஸ் என்னும் நல்லோனுக்குத் தலைமைப் பதவியை நல்கினான். மேன்மக்கள் கம்மடஸ் என்னும் கொடுங் கோலனை வழிபடக்கூடாதெனத் தீர்மானஞ்செய்தனர். வேந்தன் உடலைக் கொளுக்கியால் இழுத்துச்சென்று வாள்வீரர் உடையணியும் மண்டபத்தில் இட்டனர். பேட்டினாஸ் 86 நாள் அரசாண்டபின் காவலரால் கொல்லப்பட்டான்.

காவலர்கள் தலைமைப்பதவியைப் பொருள்நனி கொடுப்போர்க்கு அளிப்பதாகக் கூறினர். டிடியஸ்யூலியானஸ் என்னும் தனவானுக்கு உத்தரீயம் அளிக்கப்பட்டது. தனவான் உண்டாடிக்களித்தாலும் தன் உயிர்க்கஞ்சித் துயிலின்றியிருந்தான். பிரித்தானியாவையாளும் படைத்தலைவன் குளோடியஸ் அல்பினஸ், சிரியாநாட்டுத் தலைவன் பேஸ்கன்னியஸ் நிகர், பன்னோனியநாட்டுத்

தலைவன் சப்டீமஸ் சவரஸ் என்போர், தலைமைப்பதவியைப்பெற விரும்பினார்கள். சவரஸ் 400 காசு ஒவ்வொரு வீரனுக்கும் நல்கித் தனக்கே தனிக்கோலுரியதெனமுரசறைவித்தான். யூலியானஸ் பயந்து சவரஸ் என்னும் தலைவனைக் கொல்லும்படி தீவினையாளரை ஏவினன். சவரஸ் 600 வீரரொடு மாளிகை புகுந்து வேந்தனை நீராடும் மண்டபத்திற் சிரச்சேதஞ்செய்தான். தலைவன் நிகருக்குத் தான் நண்பனென நடித்துக்காட்டி அவனையும் கொல்வித்தான். அல்பினனையும் இவ்வண்ணம் தொலைக்கமுயன்றான்.

சவரஸ் மந்திரம் கனவு சாத்திரம் என்பவற்றில் நம்பிக்கையுள்ளவன். வேந்தனின் இரண்டாம் மனைவி யுலியாடம்மா என்பாள் கலைஞரையும் வித்தைவல்லோரையும் புரந்தாள். அவள் வனப்பு வாய்ந்தவளாயினும் கற்பில்லாள். அவளுடைய மக்கள் கராக்காலா கேதன் என்னும் இருவீணர் தம்முட் கலகப்பட்டு, நடிகர் வாள்வீரர் முதலியோரை இரு கட்சியாக்கினர். தகப்பன் சவரஸ் இருவர்க்கும் தலைமைப்பதவியை அளித்தான். இங்ஙனம் மூன்று தலைவர்கள் ஆண்டனர். கராக்காலா தன் தந்தையைக் கொல்லமுயன்றான் எனினும் தந்தை தன் மகனைத் தண்டிக்கவில்லை. கராக்காலனை ஐரோப்பிய ஆபிரிக்கா நாடுகளையும், கேதனை ஆசியநாடுகளையும் ஆளும்படி தந்தை ஆஞ்ஞாபித்து இறந்தான்.

கராக்காலன் தன் தம்பியின் உயிரைக்கவர்ந்து, அவன் கட்சியினரை ஆயிரக்கணக்காகக் கொன்று, கொடுங்கோலோச்சினான். மக்கிறீனஸ் என்னும் அமைச்சனை அரசாளவைத்துத் தான் நாடு காணிய சென்றான். கரகாயி என்னும் ஊரில் சந்திரனை வணங்கச் செல்லும் வழியிலே அரசனைக்கொல்லும்படி மாசாலிஸ் என்னும் ஒரு வீரனை அந் நன்றியற்ற அமைச்சன் ஏவினான். இங்ஙனம் கி. பி. 217-ஆம் ஆண்டில் மக்கிறீனஸ் என்னும் அமைச்சன் வேந்தனானான்.

மக்கிறீனஸ் தன்மகனைப் பத்துவயதினனாயிருந்தபோதிலும் இளவரசாக்கினான். காவல்வீரர் தாம் சுவாதீனமற்றதை நினைந்து துக்கப்பட்டனர். காரக்காலனின் இராணி யூலியா இறந்தாள். அவளுடைய தங்கை யூலியாமீசா என்பவளுக்கு சோமியா மம்மியா என இரு மகளிர் இருந்தனர். சோமியாவின் மகன் பசியானஸ் சிரியாதேசத்தில் சூரியன்கோயில் ஒன்றில் பூசாரியாய் அமர்ந்திருந்தான். அவனைத் தாய் காரக்காலனுக்குப் பிறந்தவன் எனக் கூறினள். அரசன் தன் காலத்தை வாளா கழிக்கப் பகை ஒருபுறம் வளர்ந்தது. மெய்காப்பாளர் பகைவரை எதிர்த்தனர். பசியானஸ் என்பவனும் முன்னணியில்நின்று போர்புரிந்தான். கமிஸ் என்னும் ஒரு வித்திலன் (Eunuch) படைவகுத்தலில் அநுபவமில்லோனாயினும் தன் திறமையாற் போரை நடாத்தினான். மக்கிறீனஸ் அஞ்சியோடினான். இருபதுநாள் அரசாண்டபின் அவனும் அவன் மகனும் கொல்லப்பட்டனர். இவ்வெற்றியை ஒரு விக்கிரகத்தின் சக்தியால் தான் பெற்றதாகப் பசியானஸ் நினைத்தான். அவ்விக்கிரகம் லிங்கம்போன்ற ஒரு கல். அது சூரியதேவன். எகபாலஸ் என்பவனுடைய விக்கிரகம். பசியானஸ் இவ்விக்கிரகத்தைக்கொண்டு வீதிவலஞ்செய்து வீதிதொறும் பொற்பொடி தூவினான். அஸ்டாற்றி என்னும் மதிதேவதையைச் சூரியபகவான் விவாகஞ்செய்த திருநாளை உரோமாபுரத்திற் கொண்டாடினான். பசியானஸ் ஏகபாலஸ் என்னும் பெயரைச் சூடினான். காமக்கிழத்திகள் பலரோடுகூடி இன்புற்றிருந்தான். வெஸ்தாத்தேவதைக்குப் பணிசெய்யும் கன்னி யொருத்தியைக் கற்பழித்தான். பெண்களுடைய நடையுடைபாவனைகளை விரும்பிப் பெண்மையை அவாவினான். வீரர் அவனை வெறுத்து அவன் மைத்துனனும் மம்மியாவின் மகனுமாகிய அலெக்சாந்தனை வேந்தனாக்க விரும்பினர். அலெக்சாந்தனுக்கு இளவரசுப்பட்டத்தை நல்கும்படி வேந்தனுக்குத் தாய் புத்திமதிகூறினள். அலெக்சாந்தன் கொல்லப்பட்டான் என ஒரு கதை பரவிற்று. உடனே காவலர்படை வேந்தனையும்

தாயையும் கொன்றுவீழ்த்தியது. அவன் உடலை நைபர்நதியில் எறிந்தனர். அலெக்சாந்தன் 17 ஆட்டைப்பராயத்தினனாயினும் தலைமைப்பதவியை ஏற்றான். அவன் தாய் 16 மேன்மக்களைத் தெரிந்து அமைச்சராக்கி அரசியலை நடாத்தும்படி ஏவினள். அரசனை அல்பியன் என்னும் வழக்குநூல்வல்லோன் கற்பித்து வந்தான். காவலர்தலைவன் அப்பியஸ், அரசதுரோகம் விளைத்தனன். அவனை அலெக்சாந்தர் எகிப்துக்குத் தேசாதிபதியாக்கிச் சிலகாலஞ் சென்றபின் கொல்வித்தான். சரித்திர ஆசிரியன் டையன் கசியஸ் பன்னோனியநாட்டிற் பாசறையிட்டிருந்த படைக்குத் தலைவனாயிருந்தான். அப்படை பகைத்தெழுந்தது. வேந்தன் சென்று உரையாடிப் படையை நட்பாக்கினான்.

தனிக்கோலாட்சிக்குட்பட்ட திரேசுநாட்டிற் பிறந்தோனாயினும் மச்சுமியன் அன்னியகுலத்துதித்தோனென எண்ணப்பட்டான். அவன் தகப்பன் கொத்தர்கூட்டத்தினன். தகப்பன், சவாஸ் வேந்தன்கீழ்ப் படைவீரனாகச் சேவித்தவன். றைபின் நதிப்பக்கத்திற் பாசறையிட்டிருந்த படை பகைத்தெழுந்து, அலெக்சாந்தனைக்கொன்று மச்சிமியனை வேந்தனெனத்தொழுதது. மச்சுமியன் எள்ளளவும் நன்றியில்லாதவன். தன் நண்பர் தனக்கு விரோதமாகச் சூழ்ச்சிசெய்தனர் எனச் சமுசயப்பட்டு, மக்னஸ் என்போனையும் 400 வீரரையும் கொன்றான்; தலைநகர்செல்லாது றைபின்நதிப் பாசறையிலிருந்து அரசியலைநடாத்த எண்ணினான்; கோயில்களைக் கொள்ளைகொண்டான்; மேலாபிரிக்காதேசாதிபதியும் சூறையாடுதலில் இவனைப் பின்பற்றினான். அந்நாட்டுப்படைவீரர் கி. பி. 237-ஆம் ஆண்டு கோடியானஸ் என்னும் ஒரு அறிஞனுக்கு முடிசூட்டினர். அவன் தந்தை கிராக்கஸ் என்னும் தேசத்தொண்டனின்குலத்துதித்தோன் என்ப. அவன் தாய் திராஜன் என்னும் பெருந்தனிக்கோல்வேந்தனின் குலத்தாள். கோடியானஸ் 80 வயதினேன். அவன்மகன் 22 காமக்கிழத்தியரை

உடையனுயிருந்தான். கோடியானஸ் என்பவனுடைய நூல்நிலையத்தில் 62000 புத்தகங்கள் இருந்தன. அவனும் அவன் மகனும் 36 நாள் தலைமைவகித்தனர். கப்பலியானஸ் என்பவனால் மகன் கொல்லப்பட்டான். தந்தை தற்கொலை புரிந்துகொண்டான், மேன்மக்கட்சபை மச்சிமியஸ், பல்பீனஸ் என்னும் இருவரை இணைத்தலைவராக நியமித்தது. பல்பீனஸ் உள்நாட்டு அரசியலை நடத்தினான். மச்சிமியஸ் சர்மானியரோடு போர்தொடரச்சென்றான். பொது சனங்கள் கோடியானனுடைய குடும்பத்தோன் ஒருவனை மூன்றுவது தலைவனாக்க விரும்பினராக, இணைத்தலைவர் இருவரும் உடன்பட்டனர். காவற்படைவீரர் மேன்மக்கட்சபை நியமிக்கும் இணைத்தலைவரை வெறுத்தல் இயல்பு. மச்சிமியஸ் தன் துணைவனைக் காமுகன் என நினைத்தான். இருவரும் தனித்திருந்த சமயத்தில் காவல்வீரர் இருவரையுங்கொன்று கோடியானன் III என்பவனுக்குத் தலைமைப் பதவியை அளித்தனர். இக்காலத்தில் பெண்காவல்செய்யும் வித்திலர் (Eunuch) அரண்மனையில் மிகுந்தனர். இவர்கள் அரசனை ஒரு வீணனெனத் தூற்றினர். கோடியானஸ் இவர்களுடைய புத்திமதி கேளாது தன்வயத்தனாகித் தனது அணிநூலாசிரியன் மகளை மணந்தான். ஆசிரியனைக் காவலருக்குத் தலைவனாக்கிப் பார்சியரோடு போர்புரியப் புறப்பட்டான். ஆசிரியன் மசித்திஸ் இறக்க, பிலிப்பு என்னும் ஒரு அராபியன் காவற்படைக்குத் தலைவனானான். படைவீரர் வேந்தனைக் கொன்று பிலிப்பை வேந்தனென வணங்கினர்.

[தொடரும்]

ஸ்ரீ:

# கம்பர்பாடலொன்றின் பொருளாராய்ச்சி.

N. K. பக்ஷிராஜன் B.A., B.L.

வசிட்டன் ஓலையால் அயோத்திவந்த பரதன், அவ்வூரின் அலங்கோலத்தைக் கண்ணுற்றுத் துணுக்கமெய்தினன். தயாதன் கோயிலில் அவனைக் காணாய்த் தன் அன்னைகோயிலிற் செல்கிறான். அங்கு அவளை வணங்கி வினவ, அவள் அரசன் இறந்த செய்தி கூறுகிறாள். கேட்ட பரதன் மிகவும் துன்புற்றுப் புலம்பி, அத்துன்பம் இராமனைக்கண்டபின்பே ஆறும் என்று அவனை வணங்கப் புறப்பட, அன்னை இராமன் சீதையுடனும் இலக்குமணனுடனும் வனஞ்சென்ற செய்தியை அறிவிக்கிறாள். பரதன் இடிமேல் இடியிடித்தாற்போல வருத்தமுற்று, அதன்காரணம் வினவலும், அன்னை தான்கொண்ட வரத்தினால் இராமன் வனம்போனமையும், அப்பிரிவு தாங்காமல் மன்னன் மாண்டதையும் கூறுகிறாள்.

சாந்தமூர்த்தியான பரதன்மனத்திற் கோபம் பொங்கி எழுகின்றது. அவன் புருவங்கள் நெரிந்து ஒன்றோடொன்று கூடுகின்றன. கண்கள் உதிரம் கக்குகின்றன (பள்ளியடைப்படலம் 66). அவன் கபோலங்கள் துடிக்கின்றன. கோபத்தால் மேனி சிலிர்க்கிறது. அவன் இதழ்கள் மடிகின்றன. கைகள் தரையில் மோதுகின்றன (ஷை 67). இவ்வாறு கோபத்தால் கொதித்த பரதன், இவ்வளவும் விளைவித்த கொடியளான தன்முன்நிற்பவளைத் தாயென நினைந்திலன்; அவளை அப்படியே கொன்றுவிடலாமா என எண்ணுகிறான். ஆனால் அண்ணன் முனிவானே என்ற எண்ணம் குறுக்கிடுகின்றது. அவன் அவளைப் பழிக்கிறான் (ஷை 70). 'உன் வஞ்சனையால் எந்தை இறந்துபட்டான்; என்முன்னவன் தவம் மேற்கொண்டு கானம் சென்றான்: என்று நான்கேட்டும் இவ்வாறு

செய்த, உன்னுடையதான, இத்தீச்செய்தியைச் சிறிதும் மனநடுக்க மின்றிச் சொன்ன, வாயை இன்னும் கிழித்தேனில்லை. எனில் நீ வஞ்சனையால் பெற்ற அரசை நானும் இச்சித்தவனேயன்றோ (ஷை 71); இவ்வளவும் செய்த நீ இன்னும் உயிருடனேயே என் கண்முன் நிற்கிறாய். நானும் உன்னை எற்றாமலிருக்கிறேன். இதன்காரணம் நான் அவ்வாறு செய்யின் இராமன்முனியும் என்னும் அச்சத்தாலே யன்றி நீ என்தாய் என்ற காரணத்தாலன்று (ஷை 72); உன்பாவி வயிற்றில் நான் கருவாயிருந்து பிறந்த பாவந்தீர, தர்மமே சான்றாக உலகம் மூன்றும் காணும்படி (உன்பேராசையில் தீ வைத்ததுபோன்று) என் அண்ணன்கொண்ட தவத்தை நானும் மேற்கொள்கிறேன்' (ஷை 85): எனப் பழித்து, 'சீ! சொலற்கரிய பாவியாகிய இவளருகில் நிற்பதும் பாவம்' என்றுகூறி, கௌசலையின் அடிவணங்கச் செல்கிறான்.

அங்கு, தன் மனத்தூய்மையை அவளுக்குக் காட்டி, வசிட்டனுடன் தந்தைக்கு உரிய கடன்கழிக்கச் சரயுநதிக்கரை சேர்கிறான். அவன் கிரியைசெய்யப்போகையில் வசிட்டன் தடுத்து, அரசன் அவனையும் அவன் அன்னையையும் விலக்கியமைகூற, பரதன் மீண்டும் புலம்பித் தன் அன்னையால் தனக்குவந்த பழியை உன்னி நைகிறான் (ஷை 136); ஈமக்கடன்கள் இளவல்செய்துமுடிக்க, யாவரும் அயோத்திசேர்கின்றனர். மந்திரிகள்கூடி நாடுமன்னனின்றியிருத்தல் தகாதெனக்கொண்டு, பரதனை அரசாளுமாறு வேண்டிக்கொள்ளத் தீர்மானிக்கின்றனர்.

ஆஸ்தானமண்டபம். பரதன் வீற்றிருக்கிறான். வசிட்டன் சுமந்திரன் முதலியோர் கூடியிருக்கின்றனர். மந்திரிகள் தங்கள் அபிப்பிராயத்தைப் பரதனிடம் தெரிவிக்க அஞ்சுகின்றனர். தம் எண்ணத்தை வெளியிடுமாறு அவர்கள் சுமந்திரனுக்குக் கண் சாடைகாட்ட, அவனும் அதுசெய்யத் துணிவில்லாதவனாய், வசிட்

டனை நோக்குகிறான். வசிட்டன் பரதனை அரசாளுமாறுவேண்டலும், பரதன் மிகவும் மனம்நொந்து, தான் இராமனைத் திரும்ப அழைத்துவரப்போவதாகக்கூறி, அதற்கு அநுகுணமாகச் சத்துருக்கினனைநோக்கிச் சேனையைத் திரட்டுமாறு கூறுகிறான். அவ்வளவில் நகரில் முரசு அறைவிக்கப்படுகிறது. நகரெங்கும் சந்தோஷமிகுதி. சேனைகள் கூடுகின்றன; ஆரவாரிக்கின்றன. அவ்வாரவாரத்தின் ஒலியால் நிகழ்ந்தவற்றைக்கூறும் பாடல்,

> "எழுந்தது பெரும்படை ஏழு வேலையின்
> மொழிந்தபே ரூழியின் முழங்கி முந்தெழ
> அழிந்தது கேகயன் மடந்தை ஆசைபோய்க்
> கழிந்தது துயர்நெடுங் காதல் தூண்டவே"

என்பது.

இச்செய்யுளுக்கு உரையுடன் வெளிவந்த பிரதிகள்மூலமாயும், மற்றும் நான் வினவிய பல தமிழறிஞர்வாயிலாகவும் ஒரே முகமாக, அடியில்வரும் பொருளே கிடைத்தது. அதாவது:—

"பெரியபடை எழுந்து, யுகாந்தத்தில் எழுவேலைகளும் ஆர்ப்பரித்து எழுந்தனபோன்று முழங்கி முன்வருதலும், அப்படையொலிகேட்டுக் கைகேயியின் மனத்திற்கிடந்த பரதன் முடிசூடி அரசாள்வான் என்னும் ஆசை அழிந்தது. இராமனை மறுபடியும் பெறுவோம் என்னும் காதல் தூண்டுகையினாலே நகரமாந்தர்க்கு அவன் பிரிவால் உண்டான துக்கம்போய் நீங்கிற்று" என்பது.

இப்பாடலின் பின்னிரண்டடிகளைப் பொறுத்தமட்டில் கீழ்க்கண்டபடி உரைகூறுதல் சிறப்பும் பொருத்தமும் உடையதாகும் என்பது என் தாழ்மையான அபிப்பிராயம். அவ்வுரை வருமாறு:—

| | |
|---|---|
| கேகயன் மடந்தை ஆசை அழிந்தது. | கைகேயியின் மனதில் பரதன் முடிசூடி அரசாள்வான் என்றுகொண்டிருந்த ஆசை முற்றவும் அழிந்துபோயிற்று. (அது அவ்விதம் அழிதலும்) |

| | |
|---|---|
| நெடுங்காதல்தூண்ட | இராமனிடம் (தன்சூழ்வினைக்குமுன்) நெடுங்காலமாகக்கொண்டிருந்த பேரன்பானது தூண்டுதலால், |
| துயர்போய்க் கழிந்தது | தான் இத்துணையன்புகொண்டிருந்த இராமனுக்குத் தானே இழைத்த கொடுமையை நினைந்து துக்கமானது அவள் மனதில் பாய்ந்து பெருகிற்று. (கழிதல் - மிகுதல்.) |

இனி இவ்வாறு உரைகொள்ள ஆதாரம் உளதா? என வினவலாம். நேரே குறித்துக் கூறமுடியாதேனும், காவியப் போக்கில் வருபவைகொண்டு இவ்வுரை சிறப்பாகப் பொருந்துகிறது என்பது எனது கோட்பாடு. எவ்வாறெனில்?

மேல் முன்கதை கூறியவாற்றால் பரதனுக்குத் தன் தாயின் மேலுள்ள கோபமும் வெறுப்பும் எத்துணையவை என்று நன்கு புலப்படும். தன் தாயைப்பற்றி உரைக்கும்போதெல்லாம் அவன் கூறுவதை நோக்குங்கள். "கடியவள் வயிற்றினிற் பிறந்த கள்வனேன்" (பள்ளியடை 91), "என்னை என்னையே ஈன்று காத்தவென், அன்னையார் எனக்கு அழகு செய்தவா" (ஷை 136), "படரெலாம் படைத்தாளைப் பழிவளர்க்கும் செவிலியை.........இடரிலாமுகத் தாளை" (குகப்படலம் 70) எனவரும் இவையெல்லாம் அவன் கைகேயிபால் கொண்டுள்ள மனநிலையை விளக்கும். கைகேயியின் கொடிய ஆசை அற்றதாக, இராமன் பதினான்குவருடங்கழிந்து மீண்டபின்பும், பரதன் கருதவில்லை. இராமன் வந்தான் என்ற செய்தி அநுமன்கூறக்கேட்டுக் களிக்கும் பரதன், ("வஞ்சனை இயற்றிய மாயக் கைகையார், துஞ்சுவர் இனி எனத் தோளைக் கொட்டுமால்") தன் ஆசை பயனற்றுவிட்டதே என்ற வருத்தத்தால் கைகேயி தன்னடைவிலேயே இனி உயிர்விடுவள் என்றே நம்புகிறான்.

இத்தகைய மனநிலையையுடைய பரதன், தான் இராமனைக் கொணரச்செல்லும் புனிதமான பிரயாணத்தில், இத்துணைக்

கொடியள் என்று கொண்ட கைகேயியை உடன்கொண்டு சென்றிருப்பானு? கைகேயியும் பரதனுடன்சென்றதாகக் கூறப்படுகின்றதே. ஒருகால் பரதனே அநுமதித்தாலும் கைகேயி தன் சூழ்வினைக்காலத்தில் கொண்ட மனப்பான்மையோடு அப்போதும் இருந்தாளாயின், உடன்சென்றிருப்பாளா? கணவன் இறந்துபடுதல்கண்டும் கல்நெஞ்சொடுநின்றனளே! அவள் தன் ஆசை பயனற்றொழியும்படி இராமனை அழைக்கப்போவாரோடு உடன் போவளா? பின் ஏன் அவள் சென்றாள்? சென்றதுமட்டுமன்று! இராமனையும் சீதையையும் தழுவிக்கொண்டு அவளும் அழுததாக வன்றோ கூறப்படுகிறது. அதுவும் கௌசலை சுமித்திரை இவரோடு ஒக்க வருந்தினதாக உரைக்கப்படுகிறதே. இராமனைக் கானகம் செல்லத் துணிந்து பணித்தபோதும், அவன் சீரைசுற்றிய திருமகளுடனும் வீரவிற்கை இளையவனுடனும் கானஞ்சென்றபோதும் கரையாத அவளுடைய மனம் எவ்வாறு, எப்போது இளக ஆரம்பித்தது? என்ற வினாக்களுக்கு விடைவேண்டுமன்றோ? அதை ஆராய்வோம்.

கைகேயி தயரதன் மாண்டபோது மனம் கரைந்தாளில்லை. அவன் இறந்தமைக்குத் தேவியர் புலம்பியதாகக்கூறுங்கால், "ஆழி வேந்தன் பெருந்தேவி யன்ன பன்னி அழுதரற்ற, தோழி யன்ன சுமித்திரையும் துளங்கி ஏங்கி உயிர்சோர" என்றும், "கோதில் குணத்துக் கோசலையும் இளைய மாதும் குழைந்தேங்க" என்றும், வசிட்டன் அழுத தேவியரைத் தேற்றிக் கோயிலில் உய்த்ததாகக் கூறுமிடத்து "அரிவைமார்கள் இருவரையும், தாவில் கோவிற் றலையிருத்தி" என்றும் கம்பர் கைகேயியைவிடுத்தே கூறினர். பரதனிடம் அவன் தந்தை இறந்ததாகக் கூறுங்கால் வருந்திக்கூறியதாக உரையாராய் "தேனமர் தெரியலான்......வானகமெய்தினன் வருந்தல் நீ" எனக் கூறியதாகவே கம்பர் உரைத்தனர். இவையெல்லாம் கைகேயியின் மனத்தில் தன்மகன் அரசனாய் நிலவத

ஆதனத்திருப்பக் கண்டு களிக்கவேண்டும் என்றுகொண்ட பேரவா நிறைந்துபெருகலும் அங்கே வேறு எவ்வித உணர்ச்சிக்கும் இடமின்றி ஒழிந்தது என்றுகொண்டே உரைக்கப்பட்டிருக்கவேண்டும்: எனக் கொள்வது தவறாகாது.

இராமன்பால் கைகேயிக்கு அளவிறந்த அன்பிருந்தது என்பது, "இராமனைப் பயந்தஎற் கிடருண்டோ" என அவளே கூறலாலும், அவன் முடிசூடப்போகிறான் என மந்தரைகூறக் கேட்டலும், அக்கூனிக்குச் "சுடர்க்கெலாம் நாயகமனையதோர் மாலை" நல்கலாலும், 'இராமன் முடிசூடல் உனக்குக்கேடாகும்' என்று கூனி சொல்லலும், இதுசொன்ன "நின்நாவைச் சேதியாது இது பொறுத்தனன்" எனச் சினந்ததாலும் பெறப்படும். எனவே இராமனுக்கு ஒரு துன்பம் வருங்கால் கைகேயியே இயற்கையில் மிக்க வருத்தமுற்றிருக்கவேண்டும். ஒருபொருளிடம் நாம்வைக்கும் ஆர்வத்திற்கேற்கவே, அப்பொருளுக்குவரும் கேட்டில் நமக்கு மனத்துயர் மிகுகின்றது. அவ்வளவில் வேறொருவர் வினையால் இராமன் "வாழ்வினை நுதலிய மங்கலத்துநாள் தாழ்வினை யதுவரச் சீரை சார்த்தி"யிருந்தானாயின் கைகேயியே மிகவும் துன்புற்றிருப்பாள் என்றுகொள்ளத் தட்டில்லை. எனில், அவன்சீரைசார்த்தித் திருமகளோடும் இளையவனோடும் கான் சென்றபோது அவள்கண்கள் எவ்விதம் கண்டு சகித்தன? இராமன்பால் அன்பு இறந்ததா? எனின் அன்று. அவ்வன்பைவிட வலியதொன்று அவள்மனத்தை இடங்கொண்டது. அது இராமன்கேட்டிற்கு இயற்கையில் அவள் மனத்தின்கட் குடியேறவந்த துயரத்தை உள்ளே புகமுடியாதபடி வாயிலடைத்தது. எனவே துயரத்துக்கு அவள் மனத்தில் இடமில்லை. இவ்வாறு அடைத்ததுதான் 'பரதன் முடிசூடி அரசாளவேண்டும்' என்றுகொண்ட ஆசை. இவ்வாசை ஒரு அணைபோலநின்று இராமனது பிரிவிற்கும், அவனுக்கு நேர்ந்த துன்பத்துக்கும் அவள் இயல்பாக அடையக்கூடிய துயரத்தைத் தடுத்தது.

அவ்வணையுள்ளதனையும் துயர் அவள்மனத்தில் புக வழியில்லை. அவ்வணை நீங்கவே, அது தன்னியல்பிலேயே பெருகி அவள் மனத்துள் பாய்ந்தது.

இவ்வாசையணை எவ்வளவுகாலம் அவள் மனவாயிலை அடைத்திருந்தது என்று கவனிப்போம். 'என்வரத்தினுல் இவ்வளவும் நடந்தது' என்று கைகேயி கூறலும், பரதன் அறிஞனுதலால் அவள் தான் அரசாள எண்ணியே இவ்வளவும் செய்திருக்கிறுள்: என்பதை உணர்கிறுன். அதனுலேயே 'உன்னுடைய ஆசையில் மண்விழ நான் தவம்முயல்கிறேன்' (பள்ளியடை 85) எனக் கூறுகிறுன். அப்போது மனஞ்சோர்ந்தனளா? அவள் ஆசை அழிந்ததா? இல்லை. ஏன்? "சிறுபிள்ளை. திடீரென்று செய்திகள் கேட்டதும் மனம் பதற்றமடைந்திருக்கிறது. இராமனே கான் போய்விட்டான். ராஜ்யம் அரசனில்லாமலிருக்க வசிட்டன் உடன்படான். சக்ரவர்த்திகிரியைகள் முடிந்தபின் பரதன் கோபமும் படபடப்பும் சாந்தமுறும். வசிட்டன்போதனையின்பேரில் பரதன் வெறுப்புடனுவது அரசை ஏற்றுக்கொள்வான். நாள் போகப் போக, சுகபோகங்களில் அவன் மனம் ஆழ்ந்துவிடும்" என்பது அவள்கொண்டிருந்த நம்பிக்கை. பரதன் தவம்செய்வேன் என்றபோது அழியவேண்டிய ஆசை, மேலேசொன்ன நம்பிக்கை என்னும் இழையைப்பற்றிக்கொண்டிருந்தது. அதனுலேயே அப்போது அவள் மனம்சலித்திலள்.

சக்ரவர்த்திகிரியைமுடிந்து வசிட்டன் பரதனை அரசாள வேண்டலும், அவன் வருந்தி, அப்பால் இராமனை அழைக்கச் சேனையைக் கூட்டுமாறு ஏவி, சேனையும் திரண்டு ஆர்த்தபோது, அவ்வொலி கைகேயியின் மனக்கோட்டையில் இடிபோல் விழுகின்றது. அவள் மனத்தில் ஒட்டியிருந்த மேலேசொன்ன நம்பிக்கை என்னும் இழை அற்றுப்போகிறது. அது அறலும் அவள் மனதில் தடையாய்நின்று அந்நம்பிக்கையிழையைப்பற்றியிருந்த ஆசையென்னும் பேரணை உடைந்து சிதறுகிறது, சிதறலும், முன்

இராமனிடம் நீண்டகாலமாகக்கொண்டிருந்த அவளது பேரன்பு தூண்டுகோலாக அவனுக்கு நேர்ந்த கேட்டிற்கு மனத்துயரும் அக்கேடு தன்னால் நேர்ந்ததென்ற கழிவிரக்கமும் பாய்ந்து அவள் மனத்தில் பெருகுகிறது. இத்துயரம் அவள்மனத்தில் உண்மையாலேயே சித்திரகூடத்தில் இராமனையும் சீதையையும் தழுவிக் கொண்டு, கௌசலை சுமித்திரையோடொக்க அவளும் கதறுகிறாள். கௌசலையும் சுமித்திரையும் அங்கடைந்த மனத்துயருக்கும் கைகேயி அடைந்த மனத்துயருக்கும் பேதமிருந்ததாகக் கம்பர் கூறவில்லை. முன் தசரதன் இறந்தபோது கைகேயியை விடுத்துக்கூறிய கம்பர், இங்கு அங்ஙனமின்றி மற்றை இருதாயரொடு சேர்த்தே கூறியது இக்காரணம்பற்றியேயன்றி வேறில்லை.

எனவே சந்தர்ப்பங்களையும் மற்ற இடங்களிற் கூறியவற்றையும் நோக்கில் மேலேகண்டபடி உரைகூறுதல் சிறக்கும் என்பது தெளிவாகும். தவிர, மற்றொன்றும் இவ்வுரையின் பொருத்தமுடைமையைச் சாதிக்கும். எவ்வாறெனில்:—மேலே நான் எடுத்துக்கொண்ட பாடலுக்கு முந்திய பாட்டில் கம்பர், வள்ளுவன், 'பரதன் தம்முனைக் கொடிநகர்தரும்' என்பு பறையறைந்ததும் அச்செய்தி, "உடுபதிவேலையின் உதயம்போன்று" சந்தோஷமிகுதியால் ஆரவாரித்ததாகக் கூறினார். அவ்வாறு நகரின் உவகை கூறியவாறே துயர்கழிந்தமை தானேபெறப்படும். ஆதலால் இப்பாடலினும் நகரிலுள்ளமாந்தர்துயர் கழிந்தது என்று கூற வேண்டியது மிகைபடமொழிவதேயாகுமன்றோ. தவிரவும், 'துயர்' என்பதற்கு 'நகரமாந்தர்துயர்' என வருவித்தேயன்றோ பொருளுரைக்கவேண்டியிருக்கின்றது.

அப்பெரும்பறையின் பேரொலியால் கௌசலை, சுமித்திரை உள்பட அந்நகரத்துள்ளார்க்கு உவகை என்னும் உணர்ச்சிதோன்றியமை முன்பாட்டால் கூறினார். ஆனால் அந்நகரில் ஒருத்தி மனத்தில்மட்டும் இவ்வொலி பல்வேறுநிகழ்ச்சிகளை நிகழ்த்தியது.

அவ்வொருத்திதான் கைகேயி. அவள்மனத்தில் நிகழ்ந்தமையைச் சிறப்பாகக்கூறவே இத்தனிப்பாடல் எழுந்தது. அதனாலேயே முன்னே 'நகர்..... உதயம்போன்றது' என்று யாவரையும் உட்கொண்டு பாடியவர், (அந்நகரில் விசேஷமான உணர்ச்சிகளை) அவ்வொலியால் அடைந்த கைகேயியின் உணர்ச்சிகளைக் கூறவே, தனியாக அவள் பெயரை இப்பாடலில் தெளிவுபெற விளக்கிக் கூறினார். அவ்வுணர்ச்சிகள்:—பரதன் முடிசூடி அரசாள்வான் என்று தான்கொண்ட ஆசை அழிதல், இராமனிடம் தான் முன்கொண்டிருந்த பேரன்பு தலைக்காட்டல், அவ்வன்பு தூண்ட அவள் மனத்தில் துயரம் பாய்ந்து பெருகல்: என்னும் இவை.

வான்மீகத்தில் கைகேயி உடன்சென்றமைக்குச் சமாதானம் கூறப்பட்டிலது. கம்பர் இக்குறையை உணர்ந்தே அதைப் பூர்த்தி செய்ய இப்பாடல் இயற்றியிருக்கவேண்டும் என்பது என்கொள்கை. இன்றேல் பரதன் அவளை உடன்வர அநுமதித்திருக்கமுடியாது. அவளைக் கொன்றால் இராமன் முனியும் என அஞ்சினதாகப் பரதன் கூறுகின்றனனே அன்றி, அவளை உடன்கொண்டுசெல்லாவிடில் அவன் முனியுமே என்று அவன் கூறியதாகக் காணப்படவில்லை. எனவே தனக்கு அவள்மேலுள்ள கோபம் தீராவிடினும் அவள் மனதில் சிறிது மாறுதல் ஏற்பட்டிருப்பதைத் சற்றாவது பரதன் அறிந்திருந்தே அவள் மற்றைத்தாயரோடு உடன்வரச் சம்மதித்திருக்கவேண்டும். அம் மனமாறுதல் ஏற்பட்டிருந்தால் மட்டிலுமே, (அவன் அனுமதித்தாலும்) கைகேயி உடன்செல்லத் துணிந்திருக்கமுடியும்.

இந்நிலையில் நான் மேற்கூறிய பதவுரை இப்பாடலின் பின்னிரண்டடிகளுக்குநன்குபொருந்தும் என்றும் இதுவே சிறப்புடையதாகும் என்றும் நம்புகிறேன். இவ்வுரையைத் தமிழறிஞர்கள் ஆராய்ந்து இதன் பொருத்தமுடைமையையும், இன்மையையும் வெளியிடுமாறு வேண்டிக்கொள்கிறேன்.